உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 36 | நள - பங்குனி - 10—4—77 | இதழ் 5

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிங் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. - சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

# தர்மம் தலைகாக்கும்

## தர்மம் என்ற சொல்லின் பொருள் :

தர்மம் தலை காக்கும் என்பது நம்மிடையே தொன்றுதொட்டு வழங்கி வரும் பழமொழி. தர்மம் என்ற சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் அறம் என்பது. தர் என்பது தர்மம் என்ற சொல்லின் வேர்ச் சொல் ஆகும். தர் என்ற சொல்லுக்குத் தாங்குதல் என்பது பொருள். "தரதி லோகம் இதி தர்ம!" தர்மமே உலகத்தைத் தாங்குகின்றது என்பது இதன் பொருள். கர்மா என்ற சொல்லுக்குச் செயல் என்பதே பொருள். தமிழில் இதனை வினை என்கிறோம். கர்மா, வினை என்பன - நல்லசெயல் கெட்ட செயல் இரண்டையும் குறிப்பன. தர்மம் என்பதோ நற்செயல் ஒன்றையே குறிக்கிறது.

**தாங்கிநிற்கும் தர்மம் :**

தர்மத்தை நாம் தாங்கினால், தர்மம் நம்மைத் தாங்கும் என்பதையே தர்மம் தலைகாக்கும் என்று கூறியுள்ளனர். ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற அளவு தர்மத்தைச் செய்தல் வேண்டும் என்பதும், அவ்வாறு செய்யும் தர்மமே அவரவர்களையும் தாங்குகின்றது என்பதும் இதன் கருத்து. உலகியலிலும் இக்கருத்தினை ஒப்பிட்டுக் காணலாம்.

குழந்தையை ஈன்று, அதன் நன்மைகளுக்காக இடையறாது பாடுபட்டு வளர்த்து ஆளாக்கிய தந்தையை, அவன் வளர்த்து ஆளாக்கிய பிள்ளையே தாங்கி நிற்கக் காண்கிறோம். செடியினை நட்டு நீர்வார்த்து அதனைப் பேணிக்காப்பவனுக்கு, அச்செடியே வளர்ந்து மரமாகி, உரிய பலன்களை வழங்கி வளர்த்தவனைக் காப்பதை உலகியலில் காணமுடிகிறது. எனவே, தருமத்தை ஏதோ பிறர் வாழவே நாம் செய்கிறோம் என்று கருத வேண்டுவதில்லை. தர்மம் நம்மை நாம் பாதுகாத்துக் கொள்ளவே துணையாகிறது என்று நாம் அறியவேண்டும்.

**கோசலை கூறிய ஆசி :**

இக்கருத்தினை வால்மீகி இராமாயணம் அழகுற விளக்குகின்றது. சிற்றன்னையாகிய கைகேயியின் எண்ணப்படி காட்டுக்குப் புறப்படும் இராமபிரான், தன் அன்னை கோசலையிடம் விடைபெறுகின்றார். அக்காலை, இராமபிரானுக்குக் கோசலை கூறும் ஆசியுரையில் தர்மத்தின் சிறப்பினை வால்மீகி பேசுகிறார்.

" யம் த்வம்பால யஸே தர்மம் த்ருத்யாச நியமேநச
ஸவை ராகவசார்தூல தர்மம்; த்வாம் அபிரக்ஷது "

" இராமா! நீ எந்ததர்மத்தை உறுதியுடனும், கட்டுப்பாட்டுடனும் காப்பாற்றுகின்றாயோ, அந்த தருமம் உன்னைக் காக்கட்டும் "

**தர்மத்தின் சாரம் :**

பலநாள் குருகுலவாசம் செய்து, பல நூல்களையும் கற்றுத் தேர்ந்த மாணாக்கன், குருவிடம் விடைபெறும்போது குருநாதர் அவனுக்கு ஆசி கூறி அறத்தின் சாரங்களை தைத்திரீய உபநிடதவாயிலாக உரைக்கின்றார். இது இக்காலத்துப் பட்டமளிப்பு விழா அறிவுரை ( Convacation Address ) போன்றது.

| | |
|---|---|
| ‘ ஸத்யம் வத ’ | (உண்மையைப் பேசு) |
| ‘ தர்மம் சர ’ | (தர்மத்தைச் செய்) |
| ‘ மாத்ரு தேவோபவ ’ | (தாயைத் தெய்வமாகக்கருது) |
| ‘ பித்ரு தேவோபவ ’ | (தந்தையைத் தெய்வமாகக்கருது) |
| ‘ ஆசார்ய தேவோபவ ’ | (குருவைத் தெய்வமாகக் கருது) |
| ‘ அதிதி தேவோபவ ’ | (விருந்தினரைத் தெய்வமாகக்கருது) |

தாய், தந்தை, குரு, விருந்தினரைப் பேணிநின்று, உண்மையோடு, தர்மத்தை இடைவிடாது செய்வதே கல்வியின் சிறந்த பயன் என்பதனை மேற்கொண்ட தைத்தரீய உபநிடத வாசகங்கள் அழகுற விளக்குகின்றன.

## டாக்டர் ஐயரவர்களின் விளக்கம் :

மகாமகோபாத்தியாய டாக்டர். திரு. உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் ‘ தர்மம் தலைகாக்கும் ’ என்னும் தலைப்பில், ஓர் அழகிய தமிழகத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றை நல்லுரைக் கோவை என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

‘லால்குடியை அடுத்த ஆங்கூர் என்ற கிராமத்தில் அன்ன தானம் சுப்பையர் என்பவர் தம்மிடம் வருபவர்க்கெல்லாம் மழையின்மையால் நிலவளம்குறைந்தகாலத்தும் இல்லையென்னாது உணவளிக்கும் தருமம் மேற்கொண்டிருந்தார், நிலவரி கட்ட வேண்டும் என்று வற்புறுத்தும் அதிகாரிகளுக்கெல்லாம், நாயன்மார்கள் வரலாற்றை நன்கறிந்த அவர், என் பரம்பரையினர் மேற்கொண்டிருந்த அன்னமிடும் தருமத்தை என்னால் நிறுத்த முடியாது. நிலவளம் மிக்க காலத்து வரிப் பணம் கட்டிவிடுகிறேன் ’ என்று கூறி, நிலத்தில் விளைந்த நெல்லைக் கொண்டும், தம்மிடம் இருந்த பொன் பொருள் முதலியவற்றை விற்றுக் கிடைக்கும் வருவாயைக்கொண்டும் தாம்மேற்கொண்டிருந்த அறச்செயலை விடாது செய்து வந்தார். கோபம்கொண்ட அதிகாரிகள், இவரிடம் பொறுமைகொண்ட ஒரு சிலரின் துணையோடு மாவட்டத் தண்டல் தலைவராகிய வெள்ளைக்காரத் துரையிடம் சென்று இவர் மீதுபலவாறுபழிசுமத்திக்கூறினர். இவற்றைக் கேட்ட துரை லால்குடியில் வந்து தங்கியிருந்து சுப்பையர் செயல் பற்றிப் பலரிடமும் கேட்டறிந்து, தாமும் ஒருநாள் நள்ளிரவில் மாறு வேடத்தில் வந்து உணவு கேட்டுப் பெற்று உண்மையறிந்து “ தருமம் தலைகாக்கும் ” என்று கூறிச்சென்றதோடு அவர் அறச்செயலுக்கு எந்த இடையூறும் வராதவாறு செய்தார் என்பதை அறிகிறோம்.’

**மனுஸ்மிருதி வழி :**

தர்மத்தை மேற்கொண்டு ஒழுகுதலே வாழ்வின் குறிக்கோளாக இருத்தல்வேண்டும். தர்மத்தை அலட்சியப்படுத்துதல் கூடாது. அதனை அழிக்க நினைத்தல் பெரும் பாவமாகும். நல்வாழ்வு என்பது தர்மத்தோடு நெருக்கமான தொடர்புடையது. தர்மத்தை மேற்கொள்ளாத ஒருவன் நல்வாழ்வை எப்படி எதிர்பார்க்க இயலும்? மனுஸ்மிருதி எட்டாவது அத்தியாயத்தின் 15 ஆவது சுலோகம்.

" தர்ம ஏவ ஹதோ ஹந்தி
தர்மோ ரக்ஷதி ரக்ஷித;
தஸ்மாத் தர்மோ ந ஹந்தவ்ய;
மாநோ தர்மோ ஹதோ வதீத் "

என்கிறது. தர்மத்தை அழித்தால் அது நம்மை அழிக்கும். அதைக் காத்தால், அது நம்மைக் காக்கும். எனவே அதை அழிக்காதே! உன்னையும் அழித்துக் கொள்ளாதே என்பது இவ்வுயரிய ஸ்லோகத்தின் பொருள். நளனுடைய அரிய வரலாற்றில், விதி வசத்தால் நள்ளிரவில், நடுக்காட்டில் தமயந்தியாகிய தன் மனைவியைப் பிரியும்போது 'தர்மதேவதை உன்னைக் காக்கட்டும்' என்று சொல்லிப் பிரிந்தான் எனப் பேசப்படுகிறது. அவ்வாறே தர்மதேவதை காத்ததையும் அறிகிறோம்.

**படிமுறை வளர்ச்சி :**

தர்மமே எல்லா வளர்ச்சிக்கும் அடிப்படை என்பதனை நாம் அறிதல் இன்றியமையாதது. தர்மம் செய்பவனுக்கு 'ஞானம்' உண்டாகும். அவ்வாறு உண்டாகும் உண்மை ஞானமே நன்மை குறித்த வைராக்கியத்தினை உண்டாக்கும். ஒரு நல்ல செயலைச் செய்தே முடிப்பேன் என்ற வைராக்கியமே நாவசைந்தால் நாடசையத்தக்க செல்வாக்காகிய ஐஸ்வரியத்தை வழங்குகின்றது. ஒரு சக்கரத்தின் ஆரக்கால்கள் போல்வன இவை. கீழே ஊன்றிநிற்பது தருமமானால், மேலே ஐஸ்வரியம் அமையும்.

**சிவபூஜையில் தர்மச்சக்கரம் :**

பெருஞ்செல்வாக்கில் திகழும்போது அடக்கமும் எச்சரிக்கையும் இன்றியமையாதன. இவை இல்லாவிடில் படிப் படியே தாழ்ச்சி வந்து சேரும். ஐஸ்வரியம் மிக்கபோது அதர்மம் செய்தலும், அதனால் அஞ்ஞானம் (அறிவின்மை) தொடர்தலும்அதனல்

அவைராக்கியம் (உறுதியின்மை) தோன்றலும், அது செல்வாக்கிழக்கும் அனைஸ்வரியத்தில் (செல்வாக்கின்மை) முடிதலும் உண்டு. இதனை உலகியலிலும் காணுகின்றோம். 'தர்மம் தலை காக்கும்' என்ற இத்தத்துவ விளக்கத்தினை சிவபூஜையில் சான்றோர் மேற்கொண்டுள்ளனர். மேற் கூறிய தர்மம் முதலிய எட்டினையும் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் ஆசனமாகக் கொள்ளப்படுவது மகிழ்ச்சியளிக்கிறது.

## தமிழில் அறக்கோட்பாடு:

தர்மம் பற்றிய இக்கருத்துக்கள் தமிழிலும் நுட்பமுற விளக்கப்பட்டுள்ளன. அறஞ்செய விரும்பு என இதனை எளிமையாக விளக்கினார் ஔவைப்பிராட்டி. 'ஈதல் அறம்' என்பதும் அவரது திருவாக்கேயாகும். திருவள்ளுவர் இவற்றை எல்லாம் உள்ளடக்கி "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்" என ஆழமாகக் குறித்துள்ளார். இதற்கு

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்"

என விளக்கமும் கூறுகின்றார். தத்தமக்கு ஒல்லும் வகை அற வினையை இயற்றுதலே தர்மம். அப்பர்பெருமான்,

"தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன்பணி செய்து கிடப்பதே"

என இக்கருத்தினை விளக்கியருளியுள்ளார்,

## படிப்பினை என்ன?

எனவே, குடும்பம் முதல் சமுதாயம், அரசுவரை ஒவ்வொன்றும் தர்மத்தைச் செய்வதால் வளர்ந்து ஞானத்தையும் ஐஸ்வர்யத்தையும் பெற்றுச் சிறத்தலையும், அதர்மத்தைச் செய்வதால் வீழ்ச்சியுற்றுத் தேய்தலையும் கண்கூடாகக் காணமுடிகிறது. இதிலிருந்து, செல்வாக்கு மிக்க காலத்தில் விழிப்போடு இருத்தல் வேண்டுமென்பதும், இக்காலத்தில்தான் அதர்மம் செய்யப் பலரும் தூண்டுவர் என்பதனையும் உணர்ந்து உயர்நிலையில் இருப்பவர்கள் தங்களைப்பாதுகாத்துக்கொண்டு ஒழுகவேண்டும் என்பதும் விளங்குகின்றது அல்லவா?

**புத்தாண்டு நம்பிக்கை:**

நள ஆண்டு முடிந்து மங்களகரமான பிங்கள ஆண்டு பிறக்கிறது. பிங்கள ஆண்டில் சூரியனே அரசனாக விளங்குகிறார். புதன் மந்திரியாகத் திகழ்கிறார். சூரியன் வேண்டியவர் - வேண்டாதவர் என்று பாராது முறை செய்யும் இயல்புடையவர். கடந்த ஆண்டின் வறட்சி ஓரளவு பாதித்தாலும் பஞ்சாங்கக் குறிப்புகளால் பிங்கள ஆண்டு நீர்வளமும், நிலவளமும் மிக்கு மக்களை சுபிட்சத்தில் வாழ்விக்கும் என்றும் நாடாளும் தலைவர்கள் கண்டிப்புடன் அரசோச்சுவர் என்றும் தெரிகின்றது.

எனவே, அரசும் மக்களும் ' தர்மம் தலைகாக்கும் ' என்பதனை நினைவுகொண்டு, அதர்மத்தைத் தவிர்த்து, தர்மத்தைச்செய்து வைராக்கியம்பெற்று எல்லாவித ஐஸ்வர்யத்தோடும் வாழ்வாங்கு வாழப் புத்தாண்டில் அனைவரும் உறுதிகொள்வோமாக.

## பக்திமிக்க பாரதப் பிரதமரைப் பாராட்டுகிறோம்

பாரத நாடு பழம்பெரும் நாடு. நாம் அனைவரும் பாரத மாதாவின் குழந்தைகள். உலக அரங்கில் பாரதநாட்டிற்கு எனத் தனித்த உயர்பண்புகள் பலவுண்டு. பக்தியும், பண்பாடும் மிக்க பாரதப் பெருமக்கள் அண்ணல் காந்தியடிகளின் தலைமையில் கத்தியின்றி, ரத்தமின்றி விடுதலைப் போரிட்டு அகிம்சா நெறியில் சுதந்திரம் பெற்றனர். விடுதலை வேட்கையும் சாத்விகப் பண்பும் கொண்ட இந்திய மக்களின் பெருமை நடந்து முடிந்த பாரதப் பொதுத் தேர்தலால் மேலும், உலக அரங்கில் உயர்ந்திருக்கிறது.

இதுவரை எதிர்க் கட்சிகளாக இருந்த கட்சிகளின் கூட்டாக அமைந்த ஜனதாக்கட்சி இத்தேர்தலில் வெற்றிபெற்று பாரதத்தை ஆளும் பொறுப்பேற்றிருக்கிறது. உலகமே வியக்கும் வண்ணம் காந்தீய அகிம்சை நெறியும், அன்பு வழியும், பாரத மக்களிடம் நிலைகொண்டிருப்பதைத் தேர்தலும் அமைதியான - சுமுகமான ஆட்சி மாற்றமும் தெளிவாகக் காட்டியுள்ளன. பாரதத்தின் பண் பாட்டுக்குப் பெருமை சேர்க்கும் வகையில்

பொதுத் தேர்தலில் பங்கேற்ற பாரத மக்களுக்கும், பாரத மக்களுக்கு நல்ல பண்பாட்டை வழி வழியாக வளர்த்துவரும் பரமேஸ்வரனுக்கும் முறையே நன்றியும் வணக்கமும் கூறி வாழ்த்துகிறோம். இந்தியப் பெருநாட்டின் இவ்வுயரிய பண்பாடு என்றும் நின்று நிலவச் செந்தமிழ்ச் சொக்கேசன் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

இன்று பாரதப் பிரதமராகப் பொறுப்பேற்றிருக்கும் திரு. மொரார்ஜிதேசாய் அவர்கள் சிறந்த காந்தியவாதியாவார். பண்பாடுமிக்க பக்தி நெறியில் ஈடுபாடு கொண்டவர். பாரத தர்மத்தில் ஊறிய பண்பாடு மிக்கவர். ஆன்மார்த்தமாக நாளும் வழிபாட்டில் அழுத்தம் மிக்கவர். அவசரச்சட்டத்தினால் வைகறையில் கைது செய்யவந்த போது 'நான் பூஜை செய்துவிட்டு வருகிறேன்' என்று சொல்லி அன்றைய பூஜையைச் செய்த பிறகே சென்றார் என்பதும், ஒரு நிருபர் உங்கள் லட்சியம் நிறைவேறிவிட்டதல்லவா என்று கேட்டபோது 'என் லட்சியம் பிரதமர் பதவியல்ல, கடவுளைக் காணவேண்டும்' என்பதே. 'கடவுளைக் கண்ணால் காணமுடியவில்லை. ஆனால் கடவுளை மக்களிடத்திலே காணுகிறேன்' என்பதும் அவரது பக்திப் பண்பாட்டை எடுத்துக் காட்டுகின்றன. கொள்கைப் பிடிப்பும், நெஞ்சுறுதியும் நீண்டநாட்களாகப் பின்பற்றும் பொதுவாழ்வும் உள்ளவர். இவரது தலைமையில் பாரதப் பெருநாடு எல்லா வளங்களும் பெற்று முன்னேற்றம் அடையுமென்று உலகம் எதிர்நோக்குகிறது.

எல்லா உயிர்களும் இறைவனின் கருணையால் வாழ்வன. அவ்வுயிர்க் கூட்டத்தில், நாமும் ஒருவர் என்ற உணர்வு நமக்கு வந்துவிடுமானால் கவலைகொள்ளத் தேவையில்லை. நம்மைக் காக்க நமக்கும் மேலான துணை ஒன்று உண்டு என்ற உறுதி வந்துவிட்டால், எதை நினைத்தும் வருந்துதலோ, வாடுதலோ இருக்காது. இவ்வுயரிய கருத்தினை,

“ எவ்வுயிரும் காக்கஒரு ஈசன்உண்டோ இல்லையோ
அவ்வுயிரில் நாம் ஒருவர் அல்லமோ — வவ்விப்
பொருகுவதும் நெஞ்சே புழுங்குவதும் வேண்டாம்
வருகுவதும் தானே வரும்.”

என்றபாடலில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் கூறியுள்ளார். இதுபோல நன்மை தீமைகளின் வரவெல்லாம் பழவினையின் பரிசுகளே என்பதனையும் ஆசிரியர் ஸ்ரீ குருஞானசம்பந்தர்,

" அவரவருக் குள்ளபடி ஈசனருளாலே
அவரவரைக் கொண்டியற்று மானல் — அவரவரை
நல்லார்பொல் லாரென்று நாடுவதென் நெஞ்சமே
எல்லாம் சிவன்செயலென் றெண் "

என விளக்கியருள்கின்ருர்.

மிகவும் உன்னதமான பாரதத்தின் ஞானியர்களின் உள்ளத்தில் எழுந்த கருத்துக்கள், பாரதப் பிரதமரின் பக்திப் பண்பாடு மிக்க உள்ளத்தில் இடம் பெற்றிருப்பதுமகிழ்ச்சிக்குரியது.

பாரதப் பிரதமர் அவர்கள் தம் சுய சரிதையில் சொல்லியுள்ள சில அரிய செய்திகளைக் கீழே ஆங்கிலத்திலும், மொழி பெயர்த்துத் தமிழிலும் தருகின்ருேம். திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள், தம்மைப்பற்றித் தாமே குறிப்பிடும் இப்பகுதி மனித ஆற்றலுக்கு மேம்பட்ட இறையாற்றலையும், நன்மை தீமைகளுக்கெல்லாம் பழவினையே அடிப்படையானது என்ற கருத்தினையும் வலியுறுத்துகின்றது. தம் வாழ்க்கை வரலாற்றில் அவர் கூறியுள்ளதையே வாசிப்போம்.

‡ "நான் செய்த முடிவுகளுக்கும், எனக்கு வந்த துன்பங்களை வெகுஎளிதாக எண்ணிச் செயல்பட்டு வருவதற்கும் என் குழந்தைப் பிராயம் முதற்கொண்டு எனக்குக் கடவுளிடம் உள்ள அசைக்க முடியாத பக்தியே காரணமாகும். எனது 25, 27 வயது வரையில் உள்ளுணர்வின் விளைவாகவும், பிறகு எனது வாழ்வில் ஏற்பட்ட அனுபவ பூர்வமாகவும் இந்த பக்தி நிலைப்பதாக உள்ளது. கடவுள் நமக்கிட்ட விதியின்படியே எல்லாம் நடப்பதாக இருப்பதால் யாராலும் நமக்கு நேரக்கூடிய எதையும் நிறுத்திவிட முடியாது என்பதை இவற்றின் மூலமாக உணர்ந்து நான் அமைதி பெற்றேன். ஒருவருக்கு நிகழும் எல்லாமும்அவர் செய்த முன்வினையின் விளைவாக ஏற்படுவனவே. அவனவன் முன் செய்த கர்மாவின் பயனுக அவனுக்கு

---

‡ "......The reason forthe decisions I made and the risks I took so easily was that from my childhood I had an unshakable faith in God. Till I was 25-27 years old this faith was instinctive, but after that it got strengthened because of my life's experiences. From these I was convinced that no one can stop what happens according to the laws of

அறுதியிடப்பட்டிருப்பவைகளை அவன் அனுபவித்தே ஆக வேண்டும். இதன் விளைவாக ஏற்படக்கூடிய துன்பங்களை மகிழ்ச்சியோடுஏற்று அனுபவிப்பவன் அவற்றினின்றும் தன்னைத் தப்புவித்துக்கொள்ள முயலக்கூடாது. மிகவும் கொடிய துன்பம் வந்த காலத்திலும் கடவுளிடம் பக்தி கொண்டவனாக இருப்பவன் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருப்பான். இதன் விளைவாக அவனுக்கு அதிகப்படியான ஆற்றலும் உண்டாவதோடு அவன் வாழ்க்கையும் வளம்பெற்றதாக ஆகிறது. அவன் பிறருக்கும் பயன்படக் கூடிய ஊக்க உணர்வைப் பெற்றவனாகின்றான்."

இத்தகு பக்திமிக்க பாரதப் பிரதமரைப் பாராட்டுகின்றோம். இவர் தலைமையில் தருமம் தழைத்து மக்கட் பண்பு மலர்ந்து சமுதாயம் செழித்து ஓங்கிச் சிறக்க வாழ்த்துகிறோம்.

வளர்க பக்திப் பண்பாடு !

வாழ்க பாரதப் பிரதமர் !!

---

God. The things that happen to one are the results of one's past actions. A man has to undergo what has been determined by his past actions. A man who faces this task gladly should not make any attempt to escape difficulties. If a man has faith in God, he can remain cheerful and peaceful even in the most difficult circumstances. As a result of this he gets additional strength and his life becomes richer. He also gets inspiration to be useful to others".

*From Mararji Desai's "The Story of My Life" (Preface)*

— The Hindu dated 25—3—1977.

---

## 'பிள்ளையாரும் பூவும்' கணக்கின்விடை

தொடக்கத்தில் இருந்க பூக்கள் 7. ஒவ்வொரு பிள்ளையாருக்கும் சாத்திய பூக்கள் 8. மூகற் பிள்ளையார்கோயிலில் தண்ணீர் தெளித்தவுடன் 7 பூக்கள் 14 ஆயின. எட்டு பூக்களைச் சாத்திய பின் இரண்டாவது கோயிலில் 6 பூக்கள் 12 ஆயின. அங்கும் எட்டு மலர்களைச் சாத்திய பின் மூன்றாவது கோயிலில் 4 பூக்கள் எட்டாயின. எட்டையும் சாத்திவிட்டு இல்லம் திரும்புகிறார் குருக்கள்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 - ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

30—3—77 முதல் 5—4—77 முடிய

மதுரையில் நிகழும் உலக சமய கலாசார தத்துவ மாநாட்டிற்கு

வழங்கியருளிய

# ஆசியுரை

“ ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே ”

— திருஞானசம்பந்தர்.

இறைவன் திருவருளைப் பெறுதற்குப் பெரியோர்வகுத்த நெறிகள் சமயங்கள் எனப்படும். சமயங்கள் அனைத்தும் உலகில் மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கும் முடிவில் பேரின்பப் பெருநிலையைப் பெறுதற்கும் துணைபுரிகின்றன.

“ எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே ”

என்பது தொல்காப்பியத்தில் ஒரு நூற்பா. ‘சொற்கள் அனைத்தும் பொருள் உணர்த்துவனவே; பொருளுணர்த்தாத சொற்கள், சொற்கள் எனப்பெறா’ என்பது இந்நூற்பாவின் கருத்து. அதுபோல எல்லாச் சமயங்களும் மக்களுக்கு நல்லனவற்றைத் தெரிவிக்கவே அமைந்துள்ளன. ஆறுகள் அனைத்தும் முடிவில் கடலைச் சென்றடைதல் போல அனைத்துச் சமய நெறிகளும் கடவுளை அடைதலையே முடிவாகக் கூறுகின்றன.

உலக அரங்கில் நம்நாடு ஆன்மீகத்துறை வளர்ச்சியில் சிறந்து விளங்குகிறது. இந்திய சமயங்களில் புத்தம், சமணம், மீமாஞ்சை, சாங்கியம், அத்வைதம், வைணவம், சைவம் ஆகியன சிறந்தனவாம். இவற்றுட் சில மதங்கள் உலகநாடுகள் பலவற்றிலும் பரவி வளர்ந்துள்ளன. சில மதங்கள் வழக்காறற்றன. சில மதங்கள் இந்திய நாட்டில் மட்டும் வேரூன்றித் திகழ்கின்றன. உயிர்கள் மறுபிறப்பு அடைகின்றன என்பதும், ஊழ்வினையால் இன்பத்துன்பங்களைப் பெறுகின்றன என்பதும், பிறப்பு இறப்புக்களின்று நீங்கி வீடுபெறுகின்றன என்பதும் இந்திய சமயங்களிடையே காணப்படும் பொதுவான ஒற்றுமைக் கருத்துக்களாகும்.

வழிபாட்டு முறைகளிலும் கோட்பாட்டு முறைகளிலும் ஒன்றொடொன்று வேறுபட்டாலும் சமயங்களனைத்தும் படிநிலைகளாக மக்களின் பல்வேறு இயல்புகளுக்கும் சூழ்நிலைகட்கும் ஏற்றவாறு வேண்டப்படுவனவேயாம். கல்வித் துறையில் குழந்தைப் பள்ளி முதல் பல்கலைக் கழக ஆய்வுக் கூடம் வரை உள்ள கல்வி நிலையங்கள், மக்களின் அறிவு வளர்ச்சிக்குத் தக்கவாறு வேண்டப்படுதல் போல ஆன்மீக வளர்ச்சித் துறையிலும் எளியமுறையில் அறவுரை கூறும் சமயம் முதல் அரிய நிலையில் தத்துவம் போதிக்கும் சமயம் வரை அனைத்துச் சமயங்களும் உயிர்களின் ஈடேற்றத்துக்குப் படிமுறையில் உதவி புரிவனவேயாம்.

சிவபிரான் ஒருவரே முழுமுதற் கடவுளாவார் என்பதும், அவர் உலகங்களைப் படைத்துக் காத்து அழிப்பது உயிர்களிடத்துள்ள ஆணவ மலத்தைப் போக்கி அவைகளுக்குப் பேரின்பத்தைக் கொடுத்தற் பொருட்டேயாகும் என்பதும் சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளாகும்.

எளிய நிலையில் அறங்கூறுவது முதல், அரிய நிலையில் தத்துவ விளக்கம் கூறுவதுவரை அனைத்துச் சமயக் கருத்துக்களையும் தன்னகத்தே கொண்டு திகழ்வது சைவம் என்பதை வேத ஆகம புராண இதிகாசத் திருமுறைகள் தெளிவிக்கின்றன.

இவ்வாறு ஒவ்வொரு சமயமும் மக்கள் மனம் பண்படவும் உயிர்கள் ஈடேற்றம் பெறவும் ஒருசில உண்மைகளைத் தெரிவிக்கின்றன.

இன்றையநிலையில் சமயச்சான்றோர்கள் தங்கள் தங்கள் சமயங்களைச் சிறப்பு நிலையிலும் ஏனைய சமயங்களைப் பொது நிலையிலும் வளர்க்கக் கடமைப்பட்டவராவர்.

சமய நெறிகள் சமுதாய வளர்ச்சிக்கு மிகவும் வேண்டப்படுவன. சட்டத்தால் சாதிக்கமுடியாத கட்டுப்பாடுகளையும், ஒழுக்க நெறிகளையும், ஒற்றுமை உணர்வினையும் சமயம் உருவாக்குகிறது; கலை, நாகரிகம், பண்பாடுகளை வளர்க்கிறது. உடலுக்கு உயிர்போல உலகிற்குச் சமயம் இன்றியமையாததாக விளங்குகிறது. மக்களை மக்களாக வாழ்விப்பதோடு தெய்வ நிலைக்கும் உயர்த்துவது சமயம் ஆகும்.

இவ்வாறு உலகம் முழுதும் பரவி வளரும் பல்வேறு சமயங்களிடையேயுள்ள பொதுமை நெறிகளை மக்கள் உணரும் வகையில் உலக சமய கலாசார தத்துவ மாநாடு பழம்பெருமையும் புதுப்பொலிவும்உடைய மதுரை மாநகரில் நிகழ்வது பாராட்டுதற்குரியது.

காஞ்சி ஸ்ரீகாமகோடி பீடாதிபதி அவர்கள் முன்னிலையில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் தலைமையில் மேதகு நேபாள மன்னர் அவர்களால் தொடங்கி வைக்கப்பெறும் இம்மாநாடு சிறந்த பயன்களை விளைவிப்பதாக.

மாநாட்டில், மதுரையாதீனம் மகாசந்நிதானம் அவர்களும், குன்றக்குடி திருவண்ணமலை ஆதீனம் மகாசந்நிதானம் அவர்களும், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து அதிபரும் மற்றும் உலகப் பேரறிஞர் பலரும் கலந்துகொள்வது மகிழ்ச்சிக்குரியது.

மாநாடு சிறப்புற நிகழவும், சமயநெறி உலகில் தழைத்து வளரவும், உலகமக்கள் அனைவரும் சமய ஒருமைப்பாட்டுணர்வுடன் உயர்நலம் பலவும் பெற்று இனிதுவாழவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க அந்தணர், வானவர், ஆனினம்;
வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக;
ஆழ்க தீயது; எல்லாம் அரன் நாமமே
சூழ்க; வையகமும் துயர் தீர்கவே. — திருஞானசம்பந்தர்.

# பிங்கள! நீ வருகின்ருய்!

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ.,

மங்களங்கள் திருநாட்டில் மலர்க; மக்கள்
மாண்புடைய தன்னுட்சி வீறு கொள்க;
எங்கெங்கும் புதுவளங்கள் எழுக; நாட்டில்
இல்லாமை புறங்கொடுத்து எழுச்சி பூக்க;
பொங்கிவரும் நீர்வளங்கள் பொலிக; ஐயன்
பூரணமாம் நல்லாசி எங்கும் தாங்க
பிங்களநீ வருகின்ருய்; அன்னை உன்றன்
பீடுடைய திருவடிகள் நிலத்தில் தோய்க!

எத்தனையோ கற்பனைகள்; புதிய வாழ்வு
எழுச்சிபெற வேண்டுமென்ற எதிர்பார்ப்புக்கள்
அத்தனையும் நீ தந்து ஏழை எங்கள்
அகங்குளிர வைப்பாயோ; பிறசெய் வாயோ?
புத்தமுதம் வேண்டிடுவார் தமக்கு; வேருேர்
பொருள்மீது நாட்டமுண்டோ? அன்னை உன்றன்
தித்திக்கும் புதுவரவு சிறக்க வேண்டி
திசைநோக்கித் தொழுகின்ருேம்! கருணைசெய்வாய்

ஏழ்அடுக்கு மாளிகையோ; கோடி செல்வம்
இணைவதையோ வேண்டுகிலோம் இந்த நாட்டில்
தாழ்வுற்ருர் தமக்கெல்லாம் உணவு; மானம்
தாங்குவதற்குத் துணி ஆடை; இருக்க இல்லம்
பாழ்பட்டுப் போகாத உரிமை வாழ்க்கை
பண்பாட்டு நல்லுணர்வு இவற்றை மட்டும்
தாழ்வின்றி வழங்கிடுக தாயே என்று
தாள்பணிந்தோம்மனமுண்டு; தருவாய்வாழ்வோம்;

# ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" 'என்பதும், ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பதும் நம் நாட்டில் வழங்கும் பழமொழிகள். மக்களைத் திருக்கோயில் வழிபாட்டில் ஈடுபடுத்தி, சைவ - சமயப் பெருமைகளை அறியச்செய்து உய்விக்கவேண்டுமென்ற பெருங்கருணையால் தருமையாதீனம் 26 - ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தமது குருமூர்த்திகள் காட்டியருளிய வழியிலேயே தமது ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளிலும் பாடல் பெற்ற தலங்கள்தோறும் முறையான வழிபாட்டிற்கு வழி காட்டி வருகிறார்கள். மாதந்தோறும் காவிரி வடகரைத் தலங்களில் வழிபாடு நடைபெறுகின்றன. உழவாரப்பணி, விசேட அபிடேக ஆராதனைகள், தலத்திருப்பதிகங்களை அச்சிட்டு ஓதி வழங்குதல், சமயப் பிரசாரம் முதலியன ஆயில்யத் திருநாள் வழிபாட்டின் அங்கங்களாகும்.

பிங்கள ஆு சித்திரைத்திங்கள் 15-ஆம் நாள் (27–4 77) புதன்கிழமையன்று ஆண்டு ஜன்மநட்சத்திரமாதலின் கீழ்க் காணும் திருத்தலங்களில் வழிபாடு சிறப்புற நடைபெறும்.

1. **தருமையாதீனம் திருக்கடவூர் திருக்கோயிலில்** காலையில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றுவார்கள். ஸ்ரீ அபிராமி அம்மை உடனுறைகிய ஸ்ரீ அமிர்தகடேசுவரப் பெருமானுக்கு மஹாந்நியாச ஏகாதச ருத்திராபிஷேகமும், அர்ச்சனை ஆராதனைகளும், ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்திக்கு சகஸ்ரநாமார்ச்சனையும் நடைபெறும்.

2. **திருந்துதேவன்குடியில்** காலை மணி 8 முதல் 10வரை ஸ்ரீ அருமருந்தம்மை உடனுறைகிய ஸ்ரீ கர்க்கடகேசுவரர் திருக்கோயிலில் அபிஷேக ஆராதனையும் வழிபாடும்.

3. **திருவியலூரில்** பகல் மணி 10-30 முதல் 12 வரை ஸ்ரீ சாந்தநாயகியம்மை உடனுறைகிய ஸ்ரீ யோகாநந்தர் திருக்கோயிலில் அபிஷேக ஆராதனையும் வழிபாடும். பகல் 12 மணி முதல் சமய விரிவுரை :–

**வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,**

**புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ.,**

அனைவரும் வருக! வழிபட்டு உய்க! அரன் அருள் பெறுக!

சிறுவர்களுக்கு:

உங்கள் திறமைக்கோர் சோதனை!

( வி. சா. கு. )

## பிள்ளையாரும் பூவும்

ஓர் ஊரில் மூன்று பிள்ளையார்கோயில். அர்ச்சகர் ஒருவர் மூன்று பிள்ளையாரையும் பூசைசெய்து வருகிறார். ஒருநாள் வழிபாட்டுக்குச் சென்ற அர்ச்சகர் விநாயகரை நீராட்டி பூக்குடலையை எடுத்து விநாயகருக்கு மலர் சூட்டத் தொடங்கினார். பூக்குடலையில் மிகக் குறைந்த மலர்களே உள்ளன. மூன்று பிள்ளையாருக்கும் நிறைவாகச் சாத்த விரும்பியது அவர்மனம். விநாயகரைவேண்டி திருமஞ்சனக்குடத்திலிருந்து சிறிது தண்ணீரை எடுத்துப் பூக்குடலையில் தெளித்தார் அதிலிருந்த பூக்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகியது. முதற்பிள்ளையாருக்கு ஒரு குறிப்பிட்ட எண்களில் மலர்களைச்சாத்தி வழிபட்டு இரண்டாவது கோயிலுக்குச் சென்றார். அங்கும் பூக்குடலையில் தண்ணீர் தெளித்தார். மலர்கள் இரட்டித்தன. முதற்பிள்ளையாருக்குச் சூட்டிய அதே எண்ணிக்கையில் பூச்சூட்டி வழிபட்டு மூன்றுவது கோயிலுக்குச் சென்றார். அங்கும் பூக்குடலைகளில் தண்ணீர் தெளித்தார். மலர்கள் இரட்டித்தன. முன்இரண்டு பிள்ளையாருக்கும் சூட்டிய அதே எண்ணிக்கையுள்ள மலர்களே கூடையில் இருந்தன. முழுவதையும் சாத்தி வழிபட்டார் அர்ச்சகர். அப்படியானால் தொடக்கத்தில் கூடையில் எத்துணை மலர்கள் இருந்திருக்கவேண்டும்? ஒவ்வொரு பிள்ளையாருக்கும் சாத்திய மலர்கள் எத்தனை? — விடை 217 ஆவது பக்கம் பார்க்க.

---

கடிதம்

"ஞானசம்பந்தம்" இதழில் வரும் தங்கள் அருளுரைகள் அறிவுக்கு நல்விருந்தாக உள்ளன. 10—3—77 இல் தில்லைத் தமிழ் மன்றத்தினர்க்கு வழங்கியருளிய உரையையும் படித்து இன்புற்றேன்; பயனடைந்தேன்.

சி. பக்கிரிசாமி,
தமிழாசிரியர், அ. உ. பள்ளி, பொதக்குடி.

---

சென்ற இதழ்க் கணக்கின் விடை

(மலர் 36 இதழ் 4 பக்கம் 157)

வண்டுகள் 4. தாமரைப் பூக்கள் 3.

# நடராச சதகம்

(குறிப்புரைகளுடன்)

தருமையாதீனம் 26-ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் குருபூஜை விழா மலராக வெளியிடப்பெற்றது.

ஞானசம்பந்தம் பதிப்பக வெளியீடு - 689

ஆசிரியர்:- ஸ்ரீ சிதம்பரநாத முனிவர்.

குறிப்புரை:- மகாவித்துவான் திரு. ச. தண்டபாணிதேசிகர்.

கிரவுன் 1x8 சைஸ். பக்கங்கள் 150. அடக்கவிலை ரூ. 1—35. அஞ்சற் செலவு தனி.

கிடைக்குமிடம்:- ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம், மாயூரம் அஞ்சல்.

இந்நூல் தமிழில் வழங்கும் சிறுபிரபந்தங்களில் சதகம் என்ற பிரபந்தவகையைச் சேர்ந்தது சிதம்பரத்தில் எழுந்தருளி விளங்கும் ஸ்ரீ நடராசப்பெருமான்மீது பாடப்பெற்ற நூறு பாடல்களைக்கொண்டது. இந்நூலைப் பாடியவர் தருமையாதீனத் திருக்கூட்டத்து அடியவராக விளங்கிய ஸ்ரீ சிதம்பரநாதமுனிவராவார். சிவாகமங்களின் சாரமாய் விளங்கும் இந்நூல் சமய நுண் பொருள்கள் பலவற்றைத் தெளிவாக அறிந்துகொள்வதற்குத் துணைபுரிகிறது.

சைவ மெய்யன்பர்கள் அனைவரும் படித்துணர வேண்டிய அரியநூல். சிவாசாரியர்கள் திருக்கோயில் அறங்காவலர்கள் இறைபணியாளர்கள் முதலிய ஆலயப்பணியாளர்கள் அனைவரும் இந்நூலைப் படித்துணர்தல் நல்லது.

சிவமூர்த்தங்கள், சிவபூசைச் சிறப்பு சிவதலங்கள், சிவாலய தத்துவம், அஷ்டபந்தன நிறை, சிவாலயப் பிரதிஷ்டை சிவவிரதபலன் ஆலய வழிபாட்டுக் காலங்களும் பயனும்: அபிஷேகப் பொருள்களும் பயனும், புஷ்ப விதிகள்; விபூதி உருத்திராக்கச் சிறப்பு முதலிய பல்வேறு சமயத்தொடர்பான செய்திகளும் திருக்கோயில் வழிபாட்டுக்கு உதவும் செய்திகளும் கூறப்பட்டுள்ளன. மகாவித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் எழுதியுள்ள குறிப்புரை நூற்பொருளைத் தெளிவாக அறிந்துகொள்ள உதவுகிறது.

அன்பர்கள் இந்நூலை ஓதி உணர்ந்து சமய உண்மைகள் பலவற்றையும் அறிந்து பயனடைவார்களாக.

# திருப்பனந்தாள் – திருஆப்பாடி – திருச்சேய்ஞலூர்த்

# தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர், வித்துவான்,

திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

இந்தியப்பெருநாடு ஆன்மீகத்துறையில் சிறந்து விளங்கும் திருநாடு. இமயம்முதல் குமரிவரை எண்ணற்ற கோயில்களும் தீர்த்தங்களும் புனிதமான இடங்களும் இந்திய மண்ணைப் புனிதமடையச்செய்துள்ளன.

இந்திய நாட்டில் தென்னாடு சமயத் துறையில் சிறந்து விளங்குவது. சைவ சமயத்தின் இருகண்கள்போல விளங்கும் ஆலயங்களும் திருமடங்களும் தென்னாட்டை அருள்மணங்கமழச் செய்துவருகின்றன. தென்னாட்டுக் கோயில்களில் தேவாரப் பாடல் பெற்ற சிவாலயங்களுக்குத் தனிச் சிறப்புண்டு. அத்தகைய சிவாலயங்களில் சோழ வளநாட்டில் காவிரியின் வடகரைத் தலங்களாக விளங்குவன (39) திருப்பனந்தாள், (40) திருஆப்பாடி, (41) திருச்சேய்ஞலூர் ஆகும்.

கும்பகோணமிருந்து அணைக்கரைசெல்லும் பெருந்துச்சாலையில் இம் மூன்று தலங்களும் உள்ளன.

திருச்சேய்ஞலூர், கும்பகோணத்திலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்திலும், திருப்பனந்தாளிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளது. இது, தற்பொழுதுசேங்கனூர் என வழங்கப்பெறுகின்றது. பேருந்துச்சாலையிலிருந்து கோயில் ஒரு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

திருவாப்பாடி கும்பகோணத்திலிருந்து 16 கிலோ மீட்டர் தூரத்திலும் திருப்பனந்தாளிலிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளது.

திருப்பனந்தாள் மாயூரம் கும்பகோணம் இருப்புப் பாதையில் ஆடுதுறையிலிருந்து 10 கிலோமீட்டர் தூரத்தி லுள்ளது. ஆடுதுறை, கும்பகோணம், மாயூரம், குத்தாலம் அணைக்கரை முதலிய பல இடங்களிலிருந்தும் பேருந்துகள் மூலம் இத்தலத்திற்குச் செல்லலாம்.

## 1. திருப்பனந்தாள்

தருமையாதீனம் அருளாட்சியில் சிறந்த முறையில் பரிபாலிக்கப்பெறும் தலம் இது. பனையடியில் இறைவன் எழுந்தருளி விளங்கும் சிறப்புடையது ஆதலின் பனந்தாள் எனவும் மருஉமொழியாகப் பன்சை எனவும் வடமொழியில் தாலவனம் (தாலம் – பனை) எனவும் தாடகை பூசித்து அருள்பெற்ற தலமாதலின் தாடகையிச்சரம் எனவும் வழங்கப்படுகிறது. தேவாரத்துள் ஊர்ப்பெயர் பனந்தாள் எனவும் கோயிற்பெயர் தாடகையிச்சரம் எனவும் குறிக்கப் பெற்றுள்ளது. குங்குலியக்கலய நாயனாரின் அன்புக்கு நேர் நின்ற பெருமைக்குரியவர் இத்தலத்திறைவர்.

### கோயிலமைப்பு :

திருக்கோயில் ஊரின் நடுவே அழகிய தோற்றத்துடன் மேற்குநோக்கி விளங்குகிறது. உயர்ந்த மதில்களால் சூழப் பெற்றது. மேற்புறமும் கீழ்ப்புறமும் சிற்பங்கள் செறிந்த இராசகோபுரங்கள் கோயிலுக்கு அழகு சேர்க்கின்றன. இரண்டு பெரியபிராகாரங்களும், சுவாமி அம்பாள் கோயில் களில் தனித்தனியே உட்பிராகாரங்களும் அமைந்துள் ளன. சுவாமி மேற்குமுகமாகவும் அம்பாள் கிழக்குமுக மாகவும் எழுந்தருளி விளங்குகின்றனர்.

இராஜகோபுரத்தின் வழியே கோயிலுக்குள் நுழைந்த வுடன் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளும் பதினறுகால் மண்ட பம் இருக்கிறது. வடபால் நாககன்னிகைதீர்த்தம் உள்ளது. தென்புறம் மண்டபத்தோடு கூடிய படிக்கட்டு உள்ளது. மண்டபத்தின் மேற்புறம் நாககன்னிகையும் கீழ்ப்புறம் இலிங்கப் பிரதிட்டையும் உள்ளன.

சந்நிதியில் பலிபீடம் விநாயகர் கொடிமரம் நந்தி மண்டபம் விளங்குகின்றன. இரண்டாம் கோபுரத்திற்குள் சென்றதும் பஞ்சமூர்த்தி மண்டபம் பஞ்சமூர்த்திகளின் கதைச் சிற்பங்களோடு திகழ்கிறது. குங்குலியக்கலயர்,

சொக்கநாதர், நர்த்தன விநாயகர் சந்நிதிகளும் உள்ளன. இத்திருச்சுற்றினை வலம் வரும்போது வடகீழ் மூலையில் யாகசாலையும் அதை அடுத்து நவக்கிரகங்களின் கோயிலும் தல விருட்சங்களும் அதனடியில் தாடகை வழிபட்ட ஐதிகச் சிவலிங்கமும் நாககன்னிகைவந்து வழிபட்டவழி எனப்படும் கிணறும் உள்ளன. தென் திருமாளிகைப்பத்தியில் சமயாசாரியர்கள் பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ளனர். ஆண்ட விநாயகரின் அழகிய சிறிய தனிக்கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. உள்ளே ஆஸ்தான மண்டபத்தில் ஊர்த்துவ தாண்டவமூர்த்தி விளங்குகின்றார்.

அதைக் கடந்து சுவாமி கோயிலை அடைகிறோம். உட்பிராகாரம் வடமேற்குமூலையில் சுப்பிரமணியர் (மூலவர்) நடராஜர் முத்துக்குமாரசாமி (உற்சவர்) இலக்குமி ஆகிய மூர்த்திகள் உள்ளனர். கீழ்ப்புறம் பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் பஞ்சபூத லிங்கங்களும் பைரவர், சூரியன் சந்திரன் ஆகியோர் திருவுருவங்களும் தென்கிழக்கு மூலையில் காட்சிகொடுத்த நாயனாரும் உள்ளனர். தென் பிராகாரத்தில் அறுபத்து மூவரும் சப்தமாதாக்களும் உற்சவ மூர்த்திகளும் சட்டைநாதர் பலிபீடமும் மேற்குப் பிராகாரத்தில் சோமாஸ்கந்தர் திருவுருவமும் உள்ளன. கர்பக்கிருகக் கோஷ்டங்களில் வடபுறம் துர்க்கையும், தென்புறம் தக்ஷிணாமூர்த்தியும் உள்ளனர். சுவாமி விமானம் மூன்றுஸ்தூபியுடன் விளங்குகிறது. சுவாமி சந்நிதியில் நம் மனம் இறைவன்பால் ஈடுபடுவதை உணரலாம். "சூழ்தரு வல்வினையும் உடல் தோன்றிய பல்பிணியும், பாழ்பட வேண்டுதிரேல் மிகஏத்துமின்" என்று ஞானசம்பந்தர் பாடியருளிய பாடலை நாமும் பாடி வழிபடுவோம்.

**மூர்த்திகள் :**

சடையப்பா என அன்பர்களால் பக்தியோடு அழைத்து வழிபடப்படும் செஞ்சடையப்பர் சுயம்புவாகவிளங்குகின்றார். இறைவர் - வடமொழியில் அருணஜடேசுவரர் என்றும், தமிழில் செஞ்சடைவேதியர், செஞ்சடையப்பர் எனவும் வழங்கப்படுகிறார். அம்பிகை - வடமொழியில் பிருகந்நாயகி எனவும் தமிழில் பெரியநாயகி என்றும் அழைக்கப்பெறுகிறார். இவரது கோயில் தனியே உள்ளது.

**தலப்பெருமை :**

இத்தலம் உமையம்மை சிவபூசை செய்து ஞானோபதேசம் பெற்ற பெருமையுடையது. தாழை மலரைக் கரிகூறச்செய்து திருமுடிகண்டதாகப் பொய் கூறிய பிரமனுக்கு அதனால் ஏற்பட்ட பாதகத்தைப் போக்கியது.

இந்திரனுக்கு விருத்திராசுரனைக் கொன்ற பாவத்தையும் கௌதமர் மனைவியைக் களவால் சேர்ந்த குற்றத்தையும் போக்கி அருள்செய்தது. பிருந்தையைப் புணர்ந்த திருமாலுக்கு அருள்செய்தது. தக்கயாகத்திற்குச் சென்ற சூரியனின் பாவத்தைப் போக்கியது. குருபத்தினியைக் கூடிய சந்திரனுக்கு மா பாதகம் போக்கியது. அகத்தியர் ஆதிசேடன் தாடகை வழிபட்டது. குங்குலியக்கலயர் அன்புக் கயிற்றால் நிமிர்த்தி வழிபட அருள்செய்தது. வாசுகி மகள் சுமதி என்னும் நாககன்னிகையால் வழி படப் பெற்றது முதலிய பெருமைகள் இத்தலத்திற்குள்ளன.

## புராண வரலாறுகள்

### அம்மை ஞானோபதேசம் பெற்றது :

முன்னொரு காலத்தில் அம்பிகை இறைவனிடம் தமக்கு ஞானோபதேசம் புரிந்தருளுமாறு வேண்டினார். இறைவன் தாலவனம் சென்று நம்மைப் பூசித்தால் அருள் செய்வோம் என்றார். அவ்வாறே அம்பிகை இத்தலத்தில் இறைவனை வழிபட்டு ஞானோபதேசம் பெற்றார். உபதேசம் கேட்கும் நிலையில் எதிரெதிரே சுவாமி, அம்பாள் கோயில்கள் விளங்குகின்றன. இறைவி எதிரே நின்று வலக் காதில் பிரணவோபதேசம் கேட்கும் நிலையில் வடபால் விளங்கு கின்றார்.

### ஐராவதம் வழிபட்டது :

அசுரர்களோடு போர்புரிவதற்கு எண்ணிய இந்திரன் ஐராவதத்தைக் கொண்டு வருமாறு கூறினான். ஐராவதம் போகத்தை விரும்பி மண்ணுலகில் மந்திரமலையை அடைந் திருந்தது. சமயத்துக்குதவாத ஐராவதத்தைக் காட்டானை யாகுமாறு சபிக்கிறான் இந்திரன். ஐராவதம் நாரதர் கருத்தின்படி இத்தலத்தை அடைந்து இறைவனை வழி பட்டு அருள்பெற்றது.

### தாடகை வழிபட்டது :

தாடகை மகப்பேறு விரும்பி இத்தலத்தை அடைந்து இறைவனைப் பூசித்துவந்தாள். ஒருநாள் தாடகையின் பக்தியை வெளிப்படுத்த விரும்பினார் இறைவன். பூசை முடிவில் மாலை சாத்த எழுந்த தாடகையின் ஆடையை

நெகிழச்செய்தார். தாடகை இருகைகளாலும் ஆடையை இடுக்கிக்கொண்டு கையை உயர்த்தமுடியாத நிலையில் இம் மாலையை ஏற்றருளுமாறு இறைவனைவேண்டினாள். இறைவனும் தன்முடியைச்சாய்த்து மலர் மாலையை ஏற்றருளினார். தாடகையின் அன்புக்கு இரங்கிய இறைவன் இடபாருடராய்க் காட்சி வழங்கி அருள்புரிந்தார்.

**குங்குலியக்கலயர் :**

திருக்கடவூரில் அந்தணர் குலத்தில் அவதரித்த இவர் நாடோறும் இறைவன் சந்நிதியில் குங்குலியத்தூபம் இடும் பணியைச் செய்துவந்தார். திருவருளால் வறுமை உண்டான காலத்தும் தம் பணியைத் தவறாது செய்துவந்தார். ஒருநாள் அவர் மனைவி உணவு சமைத்தற்கு வழியின்றித் தம் திருமாங்கல்யத்தைக் கணவர் கையில் கொடுத்து உணவுப்பொருள் வாங்கிவருமாறு கூறினார். அதனை வாங்கிச்சென்றநாயனார், எதிரே குங்குலியப்பொதிகொண்டு வணிகன் ஒருவன்வரக்கண்டு, கையிலிருந்தமாங்கல்யத்தை அவனிடம் கொடுத்துப் பொதியை வாங்கிக்கொண்டு திருக்கோயிலுக்குச்சென்று தூபப்பணி செய்தார். அன்றிரவு இறைவனருளால் நாயனாரின் வீடு மாளிகையாயிற்று. செல்வங்களும் உணவுப் பொருள்களும் நிறைந்தன. கலயரிடம் இறைவன் 'வீடு சென்று பசிநீங்குக' என அருள் செய்தார். நாயனார் வீடு சென்று இறைவனருளிய அருட்கொடையை வியந்து மகிழ்ந்தார். இத்தலத்தில் தாடகைக்காகத் தலைசாய்ந்த இறைவனது திருமுடியை நிமிர்த்தி வழிபட எண்ணிய வீரசேனன் என்ற சோழ மன்னன் யானை குதிரை முதலியவற்றைக் கட்டி இழுப்பித்தும் திருமுடி நிமிராதது கண்டு கவலை கொண்டான். கடவூர் வாழ் கலயருக்குச் செய்தி எட்டியது. தாம் அப்பணியில் ஈடுபட விரும்பித் திருப்பனந்தாளுக்கு வந்து தம் கழுத்தில் கயிற்றினைக் கட்டி, சாய்ந்த சிவலிங்கத்தின் திருமுடியினை இழுத்தார். நாயனாரின் அன்புக்குகந்த பெருமான் தன் திருமுடியை நிமிர்த்தார். தேவர்கள் மலர்மழை பொழிந்து வாழ்த்தினர் இவ்வரலாற்று நிகழ்ச்சியைப் பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமான்,

"நண்ணிய ஒருமை அன்பின் நாருறு பாசத்தாலே
திண்ணிய தொண்டர் பூட்டி இளைத்தபின் திறம்பி நிற்க
ஒண்ணுமோ கலயனார்தம் ஒருப்பாடு கண்டபோதே
அண்ணலார் நேரே நின்றார் அமரரும் விசும்பில் ஆர்த்தார்."

என்றருளிச் செய்திருர். நாயனுர் சிலகாலம் இங்குத்தங்கிப் பின் திருக்கடவூர் சென்றுர்.

**நாககன்னிகை வழிபட்டது :**

நாகலோகத்தில் வாசுகி மகள் சுமதியின் கனவில் இறைவன் தோன்றி 'நீ தாலவனமடைந்து நம்மைப்பூசிக்க' என அருள் செய்தார். சுமதியும் அவ்வாறே பிலத்தின் வழியாக அம்பாள் சந்நிதியில் உள்ள கூபத்தில் தோன்றி இறைவனை வழிபட்டு வந்தாள். திருக்கோயிலின் வழிபாட்டுக்கு வந்த அரித்துவசன் என்ற மன்னனைக் கண்டு காதல் கொண்டு அவனை மணந்து இன்புற்ருள் சுமதி. தன் பெயரால் தீர்த்தம் அமைத்து திருப்பணிகள் பலவும் செய்து முடிவில்தன் கணவரோடு வீடு பேறுற்ருள்.

சங்குகன்னன் நாககன்னன் முதலியோர் இத்தலத்திறைவனை வழிபட்டு அருள் பெற்றுள்ளனர்.

**தீர்த்தங்கள் :**

கோயிலுக்கு உள்ளும் புறமும் இத்தலத் தொடர்பான பல தீர்த்தங்கள் உள்ளன. அவற்றுள் சிறந்தவை கோயிலுக்குள் அமைந்த நாக கன்னிகை தீர்த்தமும் வெளியே உள்ள மண்ணியாறும் ஆகும்.

நாககன்னிகை தீர்த்தம் :- இது இராஜகோபுரத்தை அடுத்து உள்ளது. இதில் மூழ்கினேர் பிணி நீங்கப் பெறுவர். கன்னிப்பெண்கள் நீராடி வழிபடின் விரைவில் நல்ல கணவன்மார்களை அடைவர்,

மண்ணியாறு :- முருகப்பெருமானுல் தோற்றுவிக்கப் பெற்றது. கோயிலுக்கு முன்னுல் சிறிது தொலைவில் ஓடுகிறது.

தலவிருக்ஷம் :- பனைமரம். இரண்டாம் பிராகாரத்தி லுள்ளது.

**திருவிழாக்கள் :**

காரண காமிக ஆகமப்படி ஆறுகால பூசைகள் நாடோறும் நடைபெறுகின்றன. சித்திரை மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. கந்தசஷ்டி ஆடிப்பூரம் நவராத்திரி முதலிய சிறப்பு விழாக்களும் நிகழ்கின்றன.

தருமையாதீனம் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளாட்சிக் காலத்தில் கீலக ஆண்டு ஆனித் திங்கள் 22 ஆம் நாள் வெள்ளிக்கிழமை மகா கும்பாபிஷேக விழா நிகழ்த்தப் பெற்றுள்ளது.

**ஸ்ரீ காசிமடம் :**

தருமையாதீனம் 4 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளிடம் உபதேசம்பெற்ற ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் ஸ்ரீ காசிமடம் இத்தலத்திலுள்ளது. எண்ணற்ற அருளறப் பணிகளைச் செய்துவரும் இத்திருமடம் திருக்கோயிலின் கீழ்பால் விளங்குகின்றது.

**கல்வெட்டுக்கள் :**

கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர் திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்களால் மூன்றுந் திருமுறையில் எழுதி வெளியிடப் பெற்ற கல்வெட்டு வரலாற்றுச் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

கோயிலைக் கட்டியவர் : இத்தாடகை ஈச்சரத்தைக் கருங்கல்லால் கட்டியவர் திருப்பனந்தாள் நக்கன்தரணி என்பவராவர். இச்செய்தி " ஆக நிலம் நாற்பத்திரண்டே முக்காலே நான்மாவரை முந்திரிகைக்கீழ் எண்மாவரையினில் இரண்டாயிரக்கலமும் இந்நாட்டுப் பனந்தாள் நக்கன்தரணி எடுப்பித்த திருத்தாடகை ஈச்சரத்துத் தேவர்க்கு வேண்டும் நிவந்தங்களுக்கு யாண்டு 11 ஆவது முதல் " என்னும் கர்ப்ப இல்லின் அடிப்புறச் சுவரில் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டுப் பகுதியால் அறியலாம்.

கோயிலின் பரப்பு :- " இவ்வூர்த் திருத்தாடகை ஈச்சரம் உடையார் ஸ்ரீ கோயில் என்றளந்த நிலம் இருமா அரைக் காணி முந்திரிகைக்கீழ் நாலுமாவும் " என்னும் கல்வெட்டுப் பகுதியால் இக்கோயிலின் பரப்பு இருமா அரைக்காணி முந்திரிகைக்கீழ் நாலுமா என்று பெறப்படுகின்றது.

இறைவரின் திருப்பெயர் :- இக்கோயில் கல்வெட்டுக்களில் இறைவர் திருத்தாடகை ஈச்சரத்து மகாதேவர், திருத்தாடகேச்சரத்துப் பெருமாள், திருத்தாடகை ஈச்சரமுடையநாயனர் என்னும் பெயர்களால் குறிக்கப் பெற்றுள்ளனர்.

இறைவியாரின் திருக்கோயிலைக்கட்டியவர் :– இக்கோயிலைக் கருங்கல்லால் கட்டியவர் வெண்கூருடையார் அன்பர்க்கரசு மருதமாணிக்கமான வில்லவரசர் ஆவர். இச்செய்தியை "ஸ்வஸ்தி ஸ்ரீதேவியை எழுந்தருளுவித்த வெண்கூருடையான் அன்பர்க்கரசு மருத மாணிக்கமான வில்லவராசன்" என்னும் இறைவன் கோயிலின் மகாமண்டபத்து வாசலின் தென்பாலுள்ள கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

இறைவியாரின் திருப்பெயர் :– 'பெரிய நாச்சியார்' என்பது இக்கோயிலில்எழுந்தருளியிருக்கும்இறைவியாரது திருப்பெயராகும். இச்செய்தியைத் "திருக்காமக்கோட்டமுடைய பெரியநாச்சியார்கன்மிகள் ஆதிசண்டேசுவர தேவகன்மிக்குத் தானம் பண்ணி" என்னும் முதற் குலோத்துங்கசோழனின் கல்வெட்டுப்பகுதி அறிவிக்கின்றது.

குங்குலியக்கலயரின் திருக்கோயில் :– இக்கோயிலில் குங்குலியக் கலயர்க்குத் திருக்கோயில் எடுப்பித்தவர் திருக்கடவூர்க் குங்குலியக் கலயரின் திருப்பெயரையே தமக்குப் பெயராகக்கொண்ட திருப்பனந்தாள் குங்குலியக் கலயர் ஆவர். இத்திருப்பனந்தாள் குங்குலியக் கலயர் "திருக்கடவூர்க் குங்குலியக்கலயர் சீபாதத்துக்குப் பணி செய்திருக்கும் தீயிலும் பிரியாதான் அழியா விரதங் கொண்டவனான குங்குலியக்கலயர்" என இவ்வூர்க் கல்வெட்டுக்களில் பாராட்டப் பெற்றுள்ளார். இதனால் இவரது அடியார் பத்திச் சிறப்பு இனிது விளங்குகின்றது.

இக்கோயில் இருக்கும் இடம் :– இக்கோயில் இரண்டாம் திருச்சுற்றுலையில் (பிராகாரத்தில்) மேற்குப் பக்கத்தில் இருக்கும் கோபுரத்தின் தென்பால் விமானத்துடன் கூடிய ஒரு தனிக் கோயிலாக இருக்கின்றது.

திருக்கடவூர்க் குங்குலியக்கலய நாயனாரது மனைவியாரின் திருப்பெயர் :- 'நீலாயி' என்பது இவ்வம்மையாரின் திருப்பெயராகும். இச்செய்தி இரண்டாம் பிராகாரத்தின் தென்புறச் சுவரில் பொறிக்கப் பெற்றுள்ள முதற் குலோத்துங்க சோழன் கல்வெட்டால் விளங்குகின்றது. இப்பெயரைச் சைவமக்கள் கண்டு மகிழ்வுறுவர் என்பது திண்ணம்.

எடுப்பிக்கப்பெற்ற திருவீதி :– திரு ஆப்பாடி உடையாரும் திருத்தாடகைஈச்சரம் உடையாரும் திருநாளில் (பெருவிழா முடிவில்) கொள்ளிடத்தில் தீர்த்தம் பிரசாதிக்க எழுந்தருளுவதற்கு இராசகம்பீரன் என்ற திருநாமத்தால் இரண்டாம் இராசராசன் காலத்தில் திருவீதி எடுக்கப்பெற்றது.

## 2. திருஆப்பாடி

மண்ணியாற்றின் தென்கரையில் அமைந்து விளங்கும் இத்தலம் சண்டேசுவர நாயனுர் ஆநிரைகளை மேய்க்குமிடத்தில் ஆத்தி மர நிழலில் வெண்மணலேயே சிவலிங்கமாகப் பிடித்துப் பூசித்து அருள்பெற்ற சிறப்புக்குரிய தலமாகும். சண்டேசுவரர் ஆக்கள் மேய்த்த பாடியாதலின் ஆப்பாடி எனப்பட்டது.

### கோயிலமைப்பு :

கும்பகோணம் திருப்பனந்தாள் பேருந்துச் சாலையில் உள்ள கைகாட்டி நம்மைக் கோயிலுக்கு ஆற்றுப்படுத்துகிறது. சின்னஞ்சிறிய வளமான கிராமம். சோலைகளுக்கிடையே கோயில் கிழக்குநோக்கி அமைந்துள்ளது. கோயிலின் வாயில் இராஜகோபுரம் எழுப்புவதற்குரிய அடிநிலையோடு பெரிய வாயிலாக விளங்குகிறது.

கோயிலுக்குள்ளே சென்றதும் முதற் பிராகாரத்தை அடைகிறேம். கோயில் வழிபாட்டுக்குப் பயன்படும் மலர்ச் செடிகளை உடையதாய் மனத்திற்கு மகிழ்வூட்டுவதாய் பிராகாரம் அமைந்துள்ளது. முதற்பிராகாரத்தின் வடகிழக்கு மூலையில் பஞ்சமூர்த்தி மண்டபம் உள்ளது.

கொடிமரம் நந்தி பலிபீடங்களைக் கடந்து முன்மண்டபத்தை அடைகிறேம். செங்கல்லாலான வௌவால்நத்தி மண்டபமாக அமைந்துள்ள இவ்விடம் கோயிலுக்கு மிக்க அழகு தருகிறது. இம்மண்டபத்தின் வடபால் தெற்கு நோக்கி உள்ளது அம்பாள் சந்நிதி. திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தின் சார்பில் சலவைக்கல்லால் பொறித்து வைக்கப்பெற்றுள்ள தலத் திருப்பதிகத்தை ஓதி மகிழ்ந்து உள்ளே செல்லலாம். மகாமண்டபத்தை அடைந்து உட்பிராகாரத்தை வலம் வரலாம். உட்பிராகாரத்தில் தென் மேற்குமூலையில் தலமரம் உள்ளது.

பன்னெடுங் காலமாய் விளங்கிவரும் பழமையும் தெய்வீக நறுமணமும் கமழும் இவ்வாத்திமர நிழலில்தான் அன்று சண்டேசர் ' இத்தல இறைவனை ஸ்தாபித்து வழிபட்டார் ' என்ற நினைப்பு நம் உள்ளத்தை நைவிக்கிறது. திருநாவுக்கரசு சுவாமிகள் அருள் வாக்கின்படி தலமரம் நன்ருகத் தழைத்துள்ளது. தலமரத்தினடியில் ஒரு சிவலிங்கம் அமைந்துள்ளது.

" தழைத்ததோர் ஆத்தியின்கீழ்த்
தாபரம் மணலால்கூப்பி
அழைத்தங்கே ஆவின்பாலைக்
கறந்துகொண் டாட்டக்கண்டு
பிழைத்ததன் தாதைதாளைப்
பெருங்கொடு மழுவால்வீசக்
குழைத்ததோர் அமுதம்
ஈந்தார் குறுக்கைவீரட்டனாரே. "

என்று இத்தலவரலாற்றைக் குறுக்கையில் நினைந்து பாடியருளிய திருநாவுக்கரசர் தேவாரம் நம்நினைவிற்கு வரும். அக்காலத்தில் சண்டேசர் மண்ணியாற்றங்கரையில் இக்கோயிலை அமைத்தருளினார். இன்று ஆறு இடம் பெயர்ந்து செல்கிறது. ஆற்றின் கரையிலேயே கோயில் அமைந்து விளங்கியது என்பதற் கேற்ற சான்றுகள் பலவும் உள்ளன. கோயிலின் கர்ப்பக்கிருகத்தைச் சூழ்ந்து மழைக் காலங்களில் தண்ணீர் ஊறிக்கொண்டிருக்கும். தண்ணீர் நிற்பதற்கேற்ற நிலையில் கர்ப்பக்கிருகத்தைச் சூழ 3 அடி ஆழமுள்ள பள்ளம் உள்ளது. கர்ப்பக்கிருகத்தைத் தவிர அர்த்தமண்டபம் மகா மண்டபங்களிலும் நீரூற்றுக்கள் உள்ளன. ஆதலால் மழைக்காலத்தில் எங்கும் தண்ணீர் மயமாயிருக்கும்.

மேற்குப் பிராகாரத்தில் தல விநாயகர், நால்வர் முருகன், மகாலக்ஷ்மி திருவுருவங்கள் உள்ளன. கர்ப்பக் கிருகக் கோஷ்டங்களில் தென்பால் தக்ஷிணாமூர்த்தியும், மேல்பால் இலிங்கோற்பவரும், வடபால் துர்க்கையும் உள்ளனர். வடக்குப்பிராகாரத்தில் சண்டேசுவரர் திருக் கோயில் உள்ளது.

மகாமண்டபத்தின் வடபால் நடராஜசபையும் பைரவர் திருவுருவங்களும் தென்பால் இரண்டு சிவலிங்கத் திருவுருவங்களும் உள்ளன. மகாமண்டபத்தைக் கடந்து அர்த்த மண்டபத்திற்குள் செல்லலாம். இம்மண்டபம் நல்ல வெளிச்சமும் காற்றோட்டமும் உடையதாய்த் திருப்பணி செய்யப்பெற்றுள்ளது.

கர்ப்பக்கிருக வாயிலை அடுத்துள்ள அர்த்த மண்டபத்தில் சண்டேசுவரர் அமர்ந்து இறைவனை ஆத்திமர நிழலில் இருத்தி வழிபடும் முறையில் தனிக்கோயிலில் எழுந்தருளியுள்ளார். மிகப் பழமையான திருவுருவம்.

எல்லாக் கோயிலிலும் சண்டேசர் வடக்குப் பிராகாரத்தில் தனியே விளங்குவார். இக்கோயிலில் மட்டும் இரண்டு சண்டேசர் திருவுருவங்கள் உள்ளன.

சந்நிதியில் நிற்கும்போது நம் மனம் சண்டேசுவரர் வரலாற்றையும் அவர் சிவபூசை செய்த மாண்பினையும் சிவோகம்பாவனை நிலையில் அவர் சிவனாக விளங்கிய பெருமையினையும் நம் உள்ளம் எண்ணி மகிழ்கிறது.

" அண்டமார் அமரர்கோமான் ஆதியெம் அண்ணல்பாதம்
கொண்டவன் குறிப்பினாலே கூப்பினான் தாபரத்தைக்
கண்டவன் தாதைபாய்வான் காலற எறியக்கண்டு
தண்டியார்க் கருள்கள்செய்த தலைவர் ஆப்பாடியாரே."

என்ற தேவாரத் திருப்பாடலை ஓதி மகிழ்ந்து வழிபட்டு வெளியில்வந்தால் முன்மண்டபத்தில் அம்பாள் சந்நிதியை அடைந்து அருள்கொழிக்கும் திருமுகமண்டலத்தோடு திகழும் அன்னையை வழிபடலாம்.

### சண்டேசுவர நாயனார் :

திருச்சேய்ஞலூரில் வேதியர் குலத்தில் காசிபகோத்திரத்தில் உதித்த எச்சதத்தன் என்ற அந்தணருக்கு அவர் மனைவி பவித்திரைபால் தோன்றியவர். பெற்றோர் அவருக்கு இட்ட திருப்பெயர் விசாரசருமர். இளமைக் காலத்திலேயே முன் அறிவின் தொடர்ச்சியினால் வேதாகமங்களை - கலை ஞானங்களை ஓதாதுணர்ந்தவரானார். ஏழாம் ஆண்டில் உபநயனச் சடங்கு செய்விக்கப் பெற்றார். சிவபெருமானே முழுமுதற் பொருள் எனத் துணிந்து அவர் திருவடி மறவாச் சிந்தையராயினர்.

ஒருநாள் இளங்கன்று ஒன்று இடையனை முட்டப் போயிற்று; அவன் சிறிதும் கூசாமல் அதனைக் கொம்பினால் அடிக்கக்கண்ட விசாரசருமர் பதைபதைத்து அவனைத் தடுத்து, ' பசுக்கள் தம்முடலுறுப்புக்களில் தேவர்களையும் முனிவர்களையும், புண்ணிய தீர்த்தங்களையும் உடையனவாயுள்ளன. சிவபிரானுக்குப் பஞ்சகவ்யம் அளிக்கும் அப்பசுக்களை மேய்ப்பது சிறந்ததொழிலாகும். அதுவே சிவபிரானை வழிபடும் பெருநெறி' என்றுகூறி, தானே அவ்வூர் வேதியர்களின் இசைவோடு அப்பசுக்களை மண்ணியாற்றங்கரையில் புல்லுள்ள இடங்களில் மேய்த்துவந்தார்.

பசுக்கள் அன்பாகமேய்க்கப் பெற்றதால்விசாரசருமரை மிகவும் நேசித்து தாய்போல் அன்புகாட்டி ஒருவரும்கறவா மல் முன்னிலும் அதிகமாகப் பாலைச் சொரிந்தன. அதனைக் கண்ட விசாரசருமர் அப்பால் சிவபிரானுக்குத் திருமஞ் சனமாகும் தகுதியை எண்ணினர். சிவபூசை செய்வதிலே அவருக்குப் பேரவா உண்டாயிற்று. மண்ணியாற்றின் கரையிலேயே தழைத்ததோர் ஆத்திமர நிழலிலே வெண் மணலையே சிவலிங்கமாகப் பிடித்துவைத்து பசுக்களின் பாலைக்கறந்து இறைவனுக்கு அபிடேகித்து சிவபூசை செய்துவந்தார். பசுக்கள் வேதியர்களுக்கும் குறைவின்றிப் பாலைக் கொடுத்துவந்தன.

விசாரசருமரின் இச் செயலை விளையாட்டெனக் கருதிய ஒருவன் அந்தணர்களுக்கு அச்செயலை அறிவித்தான். வேதியர்கள் 'வேள்விக்குப் பயன்படும் பாலை உன் மைந்தன் வீணுக்குகின்ருன்' என்று எச்சதத்தனிடம் கூறினர். எச்சதத்தன் 'தன் மைந்தன் இவ்வாறு செய்தால் தண்டிப்-பேன்' என்று கூறி மறுநாள் தன் மைந்தர் மாடுமேய்க்கு மிடம் சென்று மறைந்திருந்தார்.

விசாரசருமர் வழக்கப்படி நீராடிச் சிவலிங்கப் பிரதிட்டை செய்து மலர் சாத்திப் பசுவின் பாலைக்கறந்து இறைவனுக்கு அபிடேகம்செய்தார். அதைக்கண்ட எச்ச தத்தன் தன் மைந்தரை அடித்துப் பாற்குடங்களை இடறியும் கோபித்தார். பசுகரணம் பதிகரணமாகத் தம்மை மறந்து வழிபாட்டிலீடுபட்டிருந்த விசாரசருமர் இதனைக் கண்ணுற் ருர். இடையூறு செய்தவர் தந்தை என்பதை அறிந்தும் அவர் செய்தது சிவாபராதமாகையால் அவரது பாதத்தைக் களையவேண்டுமெனக் கருதித் தமக்கு முன்னே கிடந்த ஒரு கோலை எடுத்தார். அது மழுவாயிற்று. அதனுல் தன் தந்தை தாளைத் தடிந்து முன்போலச் சிவபூசை செய்ய முனைந்தார். பெருமான் உமையம்மையோடு காட்சி வழங்கிக் கைகளால் எடுத்தணைத்து 'நம் பொருட்டுத் தந்தையின் தாளைத் தடிந்தாய். இனி நாமே உனக்குத் தந்தையாயி னேம்' என்று அவரை மகன்மையோடு உச்சிமோந்து மகிழ்ந்தருளினர்.

சிவபிரானின் திருக்கரம் தீண்டப்பெற்ற விசாரசருமர் பேரொளியோடு திகழ்ந்தார். இறைவன் 'நாம் உண்ட அமுதும் பரிவட்டமும் மாலைகளும் உனக்கே ஆகும்படிச்

சண்டீசுரபதத்தைத் தந்தோம்' என்று கூறித் தம் தலையிலிருந்த கொன்றை மாலையை எடுத்து அவருக்குச் சூட்டியருளினர்.

அண்டர்பிரானும் தொண்டர்தமக்கு அதிபனாக்கி அனைத்து
உண்டகலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்காகச் [நாம்
சண்டீசனுமாம் பதந்தந்தோம் என்று அங்கு அவர்
[பொற்றடமுடிக்குத்
துண்டமதிசேர் சடைக்கொன்றை மாலைவாங்கிச் சூட்டினர்.

சண்டேசர் தேவதேவனைத் தொழுது சண்டேசுர பதத்தை அடைந்தார். எச்சதத்தன் சிவாபராதம்செய்தாலும் சண்டேசுவரப் பெருமானால் தண்டிக்கப் பெற்றதால் பாசம் நீங்கப் பெற்றுச் சுற்றத்தோடு சிவலோகம் சென்றார்.

திருமுறைகளில் பல இடங்களிலும் இவ்வரலாறு கூறப் படுகிறது. இத்தலத் திருப்பதிகத்துள் "தண்டியார்க் கருள்கள் செய்த தலைவர் ஆப் பாடியாரே" என்று அப்பர் அடிகள் அருளிச்செய்கின்றார்.

இத்தலத்தைக்குறித்த மற்றொரு வரலாறும் உண்டு. ஆப்பாடியில் இருந்த இடையர்குலத்தோன்றல் ஒருவன் பாலைக் கறந்து குடத்தைத் தன் வீட்டிற்கு எடுத்துச் செல்லும்போது வழியில் நாடோறும் கால் தடுக்கிப் பால் குடம் கவிழ்ந்துகொண்டுவருவதை அறிந்து அவ்விடத் தைச் சினங்கொண்டு கையிலிருந்த அரிவாளால் வெட்டி னன். அவ்விடத்திலிருந்து இரத்தம் பெருகியது. குருதி படிந்த திருமேனியோடு சிவலிங்கத் திருவுருவில் இறைவன் வெளிப்பட்டருளினர். இவ்வதிசயத்தைக்கண்ட இடையன் தன் அறியாமையால் ஏற்பட்ட செயலுக்கு மனம் வருந்தி னன். இறைவன் அவனது வருத்தத்தைத் தணித்து அருள்புரிந்தார் என்பதாகும்.

**மூர்த்திகள் :**

இறைவன் திருப்பெயர் :– பாலுகந்தநாதர். இறைவி திருப்பெயர் :– பெரியநாயகியம்மை. பஞ்சமூர்த்திகள் சந்திரசேகரர் முதலிய திருவிழா நாயகர்களின் திருவுருவங் களும் உள்ளன.

**தீர்த்தம் :**

க்ஷீர குண்டம் – இது கோயிலுக்கு எதிரே உள்ளது. மண்ணியாறு – இது கோயிலின் வடபால் ஓடுகிறது.

**தலவிருக்ஷம் :**

ஆத்தி இது கோயிலின் உட்பிராகாரத்திலுள்ளது. பழமையானமரம். "தழைத்ததோர் ஆத்தி" என்ற தேவாரத் தொடரின்படியே நன்கு தழைத்துள்ளது.

இத்தலம் முன்பு திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்துக்குச் சொந்தமாயிருந்தது. ஸ்ரீமத் சாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் அவர்களும் ஸ்ரீமத் அருணந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்களும் திருப்பணிகள் செய்வித்து மகாகும்பாபிஷேகம் புரிந்துள்ளனர். இதுபோழ்து தமிழ்நாடு அறநிலையத் துறையின் ஆளுகைக்குட்பட்டுள்ளது.

*** கல்வெட்டு :**

இத்திருக்கோயிலில் பிற்காலச் சோழ மன்னர்களில் இரண்டாம் இராசராசன், மூன்ருங் குலோத்துங்கன் இவர்கள்காலங்களிலும்பாண்டியரில்ஜடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தரபாண்டியதேவர் காலத்திலும்; பிற்காலப் பல்லவ மன்னரில் சகலபுவனச் சக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்கதேவர் காலத்திலும்; விசயநகர பரம்பரையினரில் வீரபொக்கண்ண உடையார்மகஞர் அரியப்பஉடையார் காலத்திலும் தேவராய மகஞர் மல்லிகார்ச்சுன மகாதேவர் காலத்திலும் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

இக்கல்வெட்டுக்களில் இறைவர் திரு ஆப்பாடி உடையார் என்றும், நடராசர், சொக்கக்கூத்தர் என்றும் கூறப் பெற்றுள்ளனர்.

இரண்டாம் இராசராசசோழதேவர் காலத்தில் இக் கோயில் தைப்பூச விழாவிற்கும், மூன்ரும் குலோத்துங்க சோழ தேவர் காலத்தில் சொக்கக்க உத்தருக்கும் நிவந்தங்கள் அளிக்கப்பெற்றிருந்தன, இவைகளுள் சொக்கக்க உத்தர்க்கு நிவந்தம் அளித்தவர் மிழலை நட்டுச் சேய்ஞலூர் உய்யக்கெண்ட பிள்ளை ஆவர்.

இவ்வூர் மிழலை நாட்டிற்கு உட்பட்டிருந்தது. அரியப்ப உடையார் காலத்துக் கல்வெட்டு ஆகவராமன் பணம் என்னும் ஒரு நாணயத்தின் (a coin) பெயரைக் குறிப்பிடுகின்றது.

---

* See the Annual report on South Indian epigraphy for the year 1932 Numbers 81 — 88.

## 3. திருச்சேய்ஞலூர்

இத்தலம் முருகப்பெருமான் வழிபட்ட தலமாதலின் திருச்சேய்ஞலூர் (சேய்+நல்லூர்) எனப்பெற்றது. சேய் என்பது முருகப்பெருமானையும் சண்டேசுவரரையும் குறிக்கும் என்று கொண்டு சண்டேசுவரர் அவதரித்த தலமாதலின் சேய்ஞலூர் எனப் பெற்றது என்று கூறு வாரும் உளர். இக்காலத்துச் சேங்கனூர் என வழங்கப் படுகிறது. முருகன் திருக்கயிலையிலிருந்து சூரசம்ஹாரத் தின் பொருட்டு வீரமகேந்திரபுரத்திற்கு எழுந்தருளிய போது வழிநடையில் இங்குவந்து சிவபூசை செய்தருளினர் என்பது கந்தபுராண வரலாறு.

### கந்தபுராணத்தில் :

முருகப்பெருமான் வழிநடையில் மண்ணியாற்றங் கரையை அடைந்தபோது மாலைநேரம் வந்தது. நான்முகன் முதலியோர் முருகனை வணங்கி இந்நதிக்கரையில் எழுந் தருளுமாறு வேண்டினர். முருகப்பெருமான் ஆணைப்படி தேவதச்சன் ஒரு நகரம் அமைத்தருளினன். தேவர்கள் அந் நகருக்கு முருகன் எழுந்தருளிய தலமாதலின் சேய்ஞ்ஞலூர் எனப் பெயரிட்டனர். முருகன் தேவதச்சன்மூலம் ஒரு சிவாலயம் எழுப்பித்து, இந்திரனை ஏவி சிவபெருமானை வழிபடற்குரிய உபகரணங்களைக் கொணரச்செய்து, வழி பட்டார். இறைவன் அருட்காட்சி வழங்கியருளினர். 'உலகம் முழுவதையும் ஒரு நொடியில் அழிக்கவல்ல உருத்திரபாசுபதம் என்னும் படைக்கலத்தை முருகனுக்கு வழங்கி 'அதனைக்கொண்டு சூரபன்மனுடைய சேனைகளை அழிக்குமாறு கூறினர்' என்பது கந்தபுராணத்தில் காணப்படும் இத்தலத் தொடர்பான செய்தியாகும்.

### கோயிலமைப்பு :

கும்பகோணத்திலிருந்து திருப்பனந்தாள் செல்லும் சாலையிலிருந்து 1 கிலோமீட்டர் தூரம் தெற்கேதள்ளி விளங் குகிறது இவ்வூர். சின்னஞ்சிறியகிராமம். கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. தரைமட்டத்தைவிட உயரமாகக்கட்டப் பெற்றுள்ளது. கோபுரவாயில் இல்லை. சந்நிதியில் சிறிய பிள்ளையார்கோயில் உள்ளது. கோயிலை அடைந்தவுடன் முதற்பிரகாரம்உள்ளது. நந்திபலிபீடங்களைக்கடந்தவுடன்

அம்பாள் சந்நிதி இருக்கிறது. திருப்பணி செய்யப்பெற்ற சிறியகோயிலில் அம்பாள் தெற்கு நோக்கி எழுந்தருளி யிருக்கிறார்.

கோயிலுக்குள் நுழைந்தவுடன் அழகிய முன்மண்டபம் கருங்கல் திருப்பணியோடு காட்சி தருகிறது. சந்நிதியில் உள்ள கருங்கல் தூணில் இக் கோயில் திருப்பணி செய் வித்த திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தின் 15-ஆவது அதிபர் ஸ்ரீமத் இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திரு வுருவம் விளங்குகிறது. சுவர்களில் தல வரலாறுகள் வண்ண ஓவியங்களாக எழுதப்பெற்றுள்ளன. மண்டபத் தின் வடபுறம் நடராஜ சபையும் எதிரே தென்புறம் சமயாசாரியர் திருவுருவங்களும் உள்ளன. உட்பிராகாரத் தில் விநாயகர், ஆறுமுகர், மகாலக்ஷ்மி திருவுருவங்களும் கோஷ்டங்களில் விநாயகர், தக்ஷிணாமூர்த்தி, இலிங்கோற் பவர், துர்க்கை திருவுருவங்களும் உள்ளன. வடபுறம் ஸ்ரீ சண்டிகேசுவரர் கோயில் உள்ளது. பஞ்சமூர்த்திகளின் திருவுருவங்களும் மற்றும் உற்சவ விக்ரகங்கள் (பலவும் உள்ளன. சண்டிகேசுவரர் அமர்ந்தநிலையில் காட்சி யளிக்கிறார். முன்மண்டபத்தைக் கடந்து அர்த்த மண்ட பத்தை அடைகிறோம்.

இறைவன் சந்நிதியில் நம் நெஞ்சம் ஈடுபடுகிறது. சண்டிகேசுவரர் திருவவதாரம் செய்து வழிபட்டதலம் என்ற பழம்பெருமை நம் நெஞ்சத்தை மேலும் இறைவன் திருவடிகளில் ஈடுபடுத்துகிறது.

“ பீரடைந்த பாலதாட்டப் பேணாத வன்தாதை
வேரடைந்து பாய்ந்ததாளை வேர்த்தடிந்தான் தனக்குத்
தாரடைந்தமாலை சூட்டித் தலைமை வகுத்த தென்னே
சீரடைந்த கோயில்மல்கு சேய்ஞலூர் மேயவனே.”

என்று ஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பாடலை ஓதி வழிபடுவோம்.

**மூர்த்திகள் :**

சுவாமி பெயர் :- சத்தகிரீசுவரர். அம்பாள் பெயர் :- சகிதேவியார். தீர்த்தம் :- மண்ணியாறு.

**புராண வரலாறு :**

இத்தலம் சண்டேசுவரர் அவதாரத்தலம். சண்டேசுவரர் ஆநிரை மேய்த்தல் தொழிலைப் புரிதற்குக் கூறப்படும் இத்தல வரலாறு பெரியபுராணத்துட் கூறப் பெறுவதாக உள்ளது. சோழமன்னர்களில் சிபிச்சக்கிரவர்த்தி இத்தலத்திற்கு வந்து இறைவனை வழிபட்டு 300 வீடுகளையும் வயல் தோட்டங்களையும், 300 அந்தணர்களுக்குத் தானமாக வழங்கினான். தானம் வாங்குவதற்குத் தகுதியுடையவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர்களில் எச்சதத்தர் என்ற அந்தணரும் ஒருவராவார். மன்னன் தானம் வழங்குவதாகக் குறித்த நாளில் அதனை வாங்குதற்கு எச்சதத்தரும் வருகிறார். வழியில் அவர்மனைவி பவித்திரை விசாரசருமரை ஈன்றெடுக்கின்றாள். அதனால் எச்சதத்தர் அதனை வாங்க இயலவில்லை. தானம் வாங்குதற்குக் குறித்த அந்தணரில் ஒருவர் குறைவதைக் கண்டு மன்னன் தக்கார் ஒருவரைத் தேடுகிறான். சேய்ஞலூர் இறைவன், தாமே கிழவேதியராகச் சென்று அத்தானத்தைப் பெற்று மன்னன் மனக்குறையைப் போக்கியருளுகின்றார்.

பதினாறு நாட்கள் கழித்து வந்து மன்னனிடம் தமக்குரிய தானத்தைக் கேட்கிறார் எச்சதத்தர். அந்தணர்களைக் கூட்டி ஆலோசிக்கிறான் மன்னன். முந்நூறாவது அந்தணரைத் தேடச்செய்கிறான் மன்னன். எச்சதத்தருக்குரிய தானத்தைப்பெற்ற அந்தணர் வாழ்விடம் சிறியகோயிலாகச் சிவலிங்க உருவோடு விளங்குவதைக்கண்ட அந்தணர்கள் சிவபிரானே வேதியராகவந்து அத்தானத்தை ஏற்றருளியிருக்கின்றார் என்பதை உணர்ந்தனர். பிறகு ஒவ்வோர் அந்தணர் இல்லத்திலும் உள்ள மாடுகளை மேய்த்தால் எச்சதத்தர் குடும்பத்தை நாங்களே ஆதரிக்கிறோம் என்று அந்தணர்கள் கூறினர். மன்னனும் அதற்கிசைந்து சென்றனன். எச்சதத்தர் திருச்சேய்ஞலூரில் தங்கி ஆநிரை மேய்க்கும் அரும்பணியைத் தம் குடும்பப்பணியாகச் செய்து வாழ்ந்தார் என்று கூறுகின்றனர். இறைவன் தானமாக ஏற்ற இடம் சிறியகோயிலோடு விளங்குகிறது.

**பெரிய புராணத்தில் :**

ஞானசம்பந்தர் புராணத்திலும் சண்டேசுவரர் புராணத்திலும் இத்தலத்தைப்பற்றிக் குறிப்பிடப்படுகிறது. திருஞானசம்பந்தர் திருப்புறம்பயம் முதலிய தலங்களை

வழிபட்டுக்கொண்டு இத்தலத்திற்கு எழுந்தருளினார். அருமறை அந்தணர் பலரும் எதிர்கொண்டழைத்தனர். சண்டேசுவர நாயனார் திருவவதாரம் செய்த தலம் ஆதலின் ஞானசம்பந்தர் சிவிகையினின்றும் கீழே இறங்கி அத்தலத்திற்கு வணக்கம் தெரிவித்து ஊருக்குள் வந்தார். அந்தணர் பலரும் ஆடிப்பாடி பொரிகளும் மலர்களும் தூவி வரவேற்றனர். ஞானசம்பந்தர் சேய்ஞலூர் இறைவனை முறையாக வழிபட்டுத் திருப்பதிகம் பாடிப்பரவினார்.

வேதியர் சேய்ஞலூர் விமலர் தங்கழல்
காதலிற் பணிந்தவர் கருணை போற்றுவார்
தாதைதாள் தடிந்தசண் டேசப் பிள்ளையார்
பாதகப் பயன்பெறும் பரிசு பாடினார்.

என்பது பெரியபுராணம்.

---

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagateswaraswamy Devasthanam, Tirukkadaiyur.

I had the privelege of visiting the famous Amirthakadeswarar Temple. I was greatly imprssed with the devotion of the staff, internal and administrative. The temple, big as it is, is well maintained. I am glad that the Dharmapuram Adhinam is looking after this, aswell as other temples under its charge and can be proud of it.

(Sd.) RAJAGOPALAN,

Dy. Secry to Govt. of Tamil Nadu.

31—12—76. C. T. & R. E. Dept.

# "கனகமன்றில் அனகநாடகன்"*

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,
திரு. ந.ரா. முருகவேள் M. A., M. O. L.,

( மலர் 36, இதழ் 4, பக்கம் 166 இன் தொடர்ச்சி )

**தாய் :**

சத்தி தத்துவத்தினின்று பின்னர்ச் சதாசிவ தத்துவம் தோன்றுவதாகச் சாத்திர நூல்கள் கூறுதலால், மற்றும் ஒரு வகையில் உமாதேவி சிவபிரானுக்குத் தாய் ஆகவும் விளங்குகின்றாள்.

இங்ஙனம், தத்துவத் தோற்ற நுட்பத்தினைத் தகவுற உணர்ந்தால், உமாதேவி சிவபிரானுக்கு மனைவி மட்டும் அல்லள்; தாயாகவும் தங்கையாகவும், மகளாகவும் கூட அமைந்து விளங்குகின்றாள் என்பதில் ஐயமும் உண்டோ? எனச் செவ்விதின் விளக்கியருள்கின்றார் குமரகுருபரர்.

ஒருத்தியே ஒருவனுக்கு மகளாகவும் - தங்கையாகவும் தாயாகவும் – மனைவியாகவும் விளங்குவது உண்டோ? இங்ஙனமும் ஓர் உறவுமுறை இருத்தல் இயல்போ? என நாம் வியந்து மயங்கி ஐயுற்று வினவினால், அதற்கும் குமரகுருபரர் அமைதியாகப் பின் வருமாறு விடை விளக்கம் கூறுகின்றார்.

**கூத்தாடி :**

நாடகமேடை ஏறி நடிக்கப் புகும் நடிகர்கள், தமக்கு அவ்வப்போது தரப்பெறும் பாகங்களை ஏற்று அவற்றிற்கும் பொருந்த வேடம் பூண்டு நடிப்பதேயன்றி, வெறும் நாடகத்தில் வரும் உறவு முரண்பாடுகள் குறித்துக் கவலை கொள்வரோ? "கூத்தாடிக்கு உறவும் இல்லை, முறையும் இல்லை" என்னும் பழமொழியினை, நீர் கேட்டதில்லையோ? சிவபிரானும் ஒரு கூத்தாடி ( குறி ஒன்றும் இல்லாத கூத்தன் ) தானே! தில்லையிற் பொன்னம்பலத்தில் நடனம் ஆடும் அக்கூத்தனுக்கு, ஒருத்தியே மனைவி - தாய் - தங்கை - மகள் என மாறிமாறி வேடம் பூண்டு நடிப்பில் துணைபுரிவது இயல்புதானே?

"எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்"

என்று அருள் நந்தி சிவாசாரியர், தமது சிவஞானசித்தியாரில் அழகுற அருளிச் செய்கின்றார் அன்றோ? இதன்கண் பொருந்

தாமை யாது உள்ளது? என நம்மை வினவிக் குறுநகை புரிந்தருள்கின்றார் குமரகுருபரர்!

**சித்தாந்த நூல்கள் :**

அப்போதும், நாம் சிந்தை கலங்கித் திகைத்து நிற்றலை நோக்கும் குமரகுருபர அடிகள், மேலும் விளக்க முற்படுகின்றார்; சிவபிரானுக்கு உமாதேவி மனைவியும், தாயும், தங்கையும், மகளும் ஆக விளங்குகின்றாள் என்று, யாமே ஏதோ புதிதாகப் புனைந்து கட்டிக் கூறுவதாக, நீவிர் நினைத்தல் வேண்டா. எத்துணையோ பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட திருமூலர், மாணிக்கவாசகர், அருள்நந்திசிவம் போன்ற சைவ சித்தாந்த சமயப் பெருஞ் சான்றோர்களும், மேலே கூறிய கருத்தை அழகுற வெளியிட்டுள்ளனர் என்கிறார்.

" வாயும் மனமும் கடந்த மனோன்மணி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்
தாயும் மகளும் நல்தாரமும் ஆமே." — திருமந்திரம்.

" மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்நகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடைய ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே."
— திருவாசகம்

" தவளத்த நீறு அணியும் தடந்தோள்
அண்ணல், தன்னொருபால்
அவள் அத்தனும்; மகனும்; தில்லையான்
அன்று உரித்தது அன்ன
கவளத்த யானை கடிந்தார் கரத்த
கண்ணார் தழையும்
துவளத் தவகுணவோ சுரும்பார்
குழல் தூ மொழியே." — திருக்கோவையார்.

" சிவம் சத்தி தன்னை ஈன்றும், சத்திதான் சிவத்தை ஈன்றும்,
உவந்திரு வரும் புணர்ந்திங்கு உலகுயிர் எல்லாம் ஈன்றும் ... "
—சிவஞானசித்தியார்.

எனவரும் திருப்பாடல்கள் யாவும், மேலே யாம் கூறிய கருத்தை அரண்செய்து, வலியுறுத்தி நிற்றல் காண்மின்கள், எனக்கூறும்

குமரகுருபரர், மேலும் ஒரு புதுமையைப் புலப்படுத்தி அருள் கின்றார்.

**பிரமசாரியும், கன்னியும் :**

சிவபிரானும் தேவியும், உலகுயிர்களை எல்லாம் உவந்து ஈன்றெடுத்த தாய் தந்தையரே ஆயினும், சிவபிரான் பிரமசாரி யாகவே திகழ்கின்றார்; அம்பிகையோ கன்னியாகவே விளங்கு கின்றாள். இவ்வியத்தகு புதுமைச் செய்தியை, அருள்நந்தி சிவாசாரியார்,

"பவன் பிரமசாரி ஆகும்; பான்மொழி கன்னி ஆகும்"

எனக் கூறியருளுதல் காண்மின்கள். பிரமசாரியாகவும் கன்னி யாகவும் இருந்தே இறைவனும் இறைவியும் உலகுயிர்களை எல்லாம் உவப்புற பெற்றெடுத்தனர் என்பது, ஒரு விந்தைச் செய்தியேபோலத் தோன்றும். "ஆயினும் விச்சதின்றியே விளைவு செய்யும் இந்திரஞால வித்தகன்" (Magician) ஆகிய அக் கூத்தாடி, எதனைத்தான் செய்யமாட்டான்? அவனுக்கு அரியது ஒன்றும் உண்டே? என வினவிச், செந்தமிழ்ச் சிவநலம் சான்ற குமரகுருபரர், நம் ஐயத்தை அகற்றித் தெருட்டியருள்கின்றார்.

**சிதம்பரச் செய்யுட்கோவை :**

குமரகுருபர அடிகள் இயற்றியருளிய 'சிதம்பரச் செய்யுட் கோவை' என்னும் சிறப்புமிக்க செந்தமிழ்ச் செய்யுளியல் நூலில்,

"கனகமார் கவின்செய் மன்றில்
அனக நாடகற்கு எம் அன்னை
மனைவிதாய் தங்கை மகள்"

எனவரும் அரிய இனிய சிறிய செய்யுள், இன்னோரன்ன பல சிறந்த கருத்துக்களைத் தோற்றுவித்து, நம்மையெல்லாம் மகிழ் வுறுத்துகின்றது. சொற்பொருள் நலனும், கற்பனை வளனும், துதைந்து செறிந்த இவ்வினிய செய்யுளை எண்ணுந்தொறும், நம் உள்ளம் கழிபேருவகை எய்திக் களிதுளும்பி நிற்கின்றது.

**முடிவுரை :**

குமரகுருபர அடிகளாரின் திருவுளக்குறிப்பின் வழியே, கனகமன்றில் ஆடும் அனகநாடகனை, நாம் அனைவரும் போற்றிப் புகழ்ந்து; நலம் பலவும் பெற்று உய்ய முயலுவோமாக!

கட்டுரை எண் - 3.

# சகலாகமசார சங்கிரகம்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர்,

மகாவித்துவான். திரு. ச. தண்டபாணிதேசிகர்

( மலர் 36, இதழ் 4, பக்கம் 186 இன் தொடர்ச்சி )

## ஸ்நான சங்கல்பம் :

ஆசமனம்பண்ணி, கரநியாசம் அங்கநியாசம் செய்து தருப்பையைக் கையிற்கொண்டு, தெளிந்த அறிவுடன், மும்முறை பிராணயாமம் செய்து, சம்ஹிதா மந்திரங்களையும் பிரணவத்தையும் சொல்கின்றவனாக, இன்று - இன்ன மாதத்தில் - திதியில் - வாரத்தில், இப்புண்ணிய தீர்த்தமாகிற நதியில் உன்னைப் பூசிக்க மூழ்குகிறேன். எனக்குக் கருணைபுரியும் என்று வேண்டிக் கொண்டு, சாதகன் ஹூம்பட் என்ற மந்தரத்தால் தூயமண்ணை எடுத்துக் கரையில் போடுக.

—ஞானரத்னாவளியில்.

மலை முதலாயினவற்றினின்றும், ஆற்றங்கரையிலிருந்தும் புண்ணிய தலங்களில் இருந்தும், ஏனைய சுத்தமான இடத்திலிருந்தும் அரசமரத்தடியினின்றும், பசுக் குளம்படியிலிருந்தும் அம்பு தோண்டிய இடத்திலிருந்தும், நன்கு வளர்க்கப்பெற்ற பனையளவுக்குக் கீழுள்ள மண்ணை இருதய மந்திரத்தால் எடுத்து வந்து, தூய இடத்தில் நான்கு மாத காலம் சேர்த்து வைக்க. பின் மழைக்காலத்திலும், சிறப்பாக சிரார்த்தகாலத்திலும் எடுத்துக்கொள்க. ஒருமுறை அஸ்திர மந்திரத்தால் ஜபிக்கப் பெற்ற மண்ணை எடுத்து, முன்னர் மலஸ்நானம் செய்து பின் விதிப்படியானஸ்நானத்தைச்செய்க. தூளியின் கூட்டத்தாற் பிசையப்பட்டிருப்பின் அங்கம் உயரங்கமாகிய உறுப்புக்கள் அனைத்திலும் பூசுதல் மலஸ்நானம் எனப்படும்.

பின்பு மந்த்ர ஸ்நானத்தைக் கேள் : மூக்கு, காது, கண்கள் நீரால் தூய்மையுறுகின்றன. வாயமுக்குகள் பற்கொம்பாலும்; கூந்தல் முதலாயின நெல்லி முள்ளி முதலியவற்றாலும், இடுப்பு

மண்ணாலும், எஞ்சியுள்ள உடல் கழுவுதலாலும் தூய்மையா கின்றன.

—காலோத்தரத்தில்.

மீன், தவளை, பாம்பு முதலான நீர் வாழ் உயிர்கள் நீரில் நாடோறும் வாழ்ந்தாலும் நீர் சிறப்புடையதே. எங்ஙனமெனில் அந்த நீரை சிவதீர்த்தமாகப் பாவிக்க. கையளவு நாற்சதுர மாகச் சுற்றி, ஹூம்பட் அந்தமான அஸ்திர மந்திரத்தால் மண்ணை எடுத்துக்கரையில்போட்டுவிட்டு சத்யோஜாதமந்திரத் தால் ஸ்தாபனமும், வாமதேவ மந்திரத்தால் (சேசயேத்) புரோட்சிக்க. அகோர மந்திரத்தால் தொட்டு, தத்புருஷ மந்திரத்தால் மூன்று பகுதியாக்க. கிழக்கு தெற்கு மேற்கு என மூன்றாகும். இவைகள் ஒவ்வொன்றாக ஈசான மந்திரத்தால் தனித்தனியே அபிமந்திரிக்க. அஸ்திர மந்திரம் சிவ மந்திரம் அங்க மந்திரங்கள் இவற்றால் முறையே கிழக்கிலிருந்து நியாசம் செய்க. அஸ்திர மந்திரத்தால் ஜெபிக்கப்பட்ட பாகத்தைப் பத்துத் திசைகளிலும் வீசுக. சிவமந்திரத்தால் ஜபிக்கப்பட்ட பகுதியைத் தீர்த்தத்தின் நடுவில் தெளிக்க. ஹூம்பட் என்ற நாராச அஸ்திர பிரயோகம் செய்யப்பட்ட நீரில் மிக நுட்பமான குற்றங்களுக்காக உச்சாடனம் செய்க. பஞ்ச பிரம மந்திரங் களாலும் அங்க மந்திரங்களாலும் தமது அங்கங்களைக் குண்டனம் செய்க. தொட்டுச் சிவதீர்த்தத்தின் நடுவில் முழுகுக.

—சுப்ரபேதாகமத்தில்

சூரியன், சந்திரன் வடிவான கையால், கும்பமுத்திரையால் புரோட்சிக்க. வௌஷட் அந்தமான ஆறு அங்க மந்திரங் களாலும் மூல மந்திரத்தாலும் பிரம மந்திரங்களாலும் அடிக்கடி முறையாக நாடோறும் அமுதநீர் என்று பாவித்து அபிஷேகம் செய்விக்க. ஜலக்கிரீடையின் முடிவில் திருமுகமுத்திரையால் நீராட்டுக.

—சிந்தியவிசுவம்.

கட்டைவிரல்களால் இரு காதுகளையும், சுட்டுவிரல்களால் கண்களையும் நடு விரல்களால் மூக்குத் துவாரங்களையும் உறுதி யாக மூடுக. பஞ்ச பிரம சிவ அங்க மந்திரங்களால், மூன்று பதமந்திரங்களால் அகமர்ஷணம் செய்க.

—சித்தாந்தத்தில்

நீருக்குள் கண்ணைத் திறந்து உறுப்புக்களனைத்தையும் அதற்குக் காட்டுக. பாதி முகமளவு அதாவது வாயளவு நீரில் மூழ்கி மீண்டும் காட்டுக. முகத்தினளவு மூழ்கி எது ஜபிக்கப் பட்டதோ அது ஒன்றாயினும் நூறு மடங்கு பயனளிப்பதாகிறது.

பாதி உடல் அளவு மூழ்கிச் செபிப்பதால் ஆயிர மடங்கு பயனும், நீருள் மூழ்கியிருந்து செபித்தால் கோடி மடங்கு பயனும் சொல்லப்பட்டுள்ளது.

—சுப்ரபேதத்தில்.

சிரத்தில்பட்ட நீரைத் தேவர்களும், முகநீரை பிதிருக்களும் நடுவிலுள்ள நீரைக் கந்தர்வர்களும், கீழுள்ளவற்றை எல்லா உயிர்களும், குடிக்கின்றார்கள். ஆதலால் நீராடியவன் ஸ்நான சாட்டியத்தைக் கையால் துடைத்தல் கூடாது. எத்துணை உறுப்புக்களில் தோன்றினவோ மூன்று மடங்கு, கோடி, அரைக்கோடியாகின்றன.

எல்லாத் தீர்த்தங்களும் பெருகுகின்றன. ஆதலால் அறிவால் நீக்கற்க. தியானத்துடன் கரையேறி முறையாக ஆசமனம் செய்க.

பட் அந்தமான மந்திரத்தால் சிவ தீர்த்தத்தை எடுக்க. உடம்பிலுள்ள நீரை உலர்ந்த ஆடையால் துடைக்க. அது நனைந்ததாயின் சப்த தாதுக்களால் உடலைத் துவட்டுக.

தூய ஆடையை யுடுத்து, நனைந்த ஆடையைக் களைக.

( தொடரும் )

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

**Sri Panchanatheeswaraswamy Devasthanam, Thiruvaiyaru.**

It was my fortune to have had the Dharshan of the Diety this morning. The temple is being maintained well by the authorities and poojas are being performed on sound sastra lines. It was indeed a pleasure to have heard the chanting the Mantras on perfect by round lines.

(Sd.) O. K. MOORTHY,

Director General. Ministry of Home Affairs.

New Delhi.

3—12—76

# செய்திகள்

## தருமையில் வசந்த நவராத்திரி விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஆனந்த பரவசர் பூங்காவில் எழுந்தருளி அருள் வழங்கும் வன துர்க்கா தேவி ஆலயத்தில் நள ஆண்டு பங்குனித் திங்கள் 7-ஆம் நாள் 20—3—77 ஞாயிற்றுக்கிழமை முதல் வசந்த நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றது. உலக நலனை முன்னிட்டு வன துர்க்கா தேவிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நாள்தோறும் நவசக்தி அர்ச்சனைமூலம் லட்சார்ச்சனையும் நடைபெற்றன. 29—3—77 செவ்வாய்க்கிழமையன்று லட்சார்ச்சனை நிறைவுபெற்றது. இந்நாட்களில் சந்நிதியில் தேவீமாகாத்மிய பாராயணமும் அபிராமி அந்தாதி பாராயணமும் நடைபெற்றன. காலை மாலை இரு வேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். பக்தர்கள் பலர் வந்து வழிபட்டுப் பயன் பெற்றனர்.

## ஜன்மநக்ஷத்திர வழிபாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 26-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது மாத ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் 31—3—77 வியாழக்கிழமை யன்று காலையில் திருச்சேய்ஞலூர் ஸ்ரீ சகிதேவியம்மை உடனாகிய ஸ்ரீ சத்தகிரீஸ்வரர் திருக்கோயிலிலும், நண்பகலில் திரு ஆப்பாடி ஸ்ரீ பெரியநாயகி யம்மை உடனுறை ஸ்ரீ பாலுகந்தநாதர் திருக்கோயிலிலும், மாலையில் தருமையாதீனம் திருப்பனந்தாள் ஸ்ரீ பிருகந்நாயகி யம்மை உடனுறை ஸ்ரீ அருணஜடேசுவரர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் அர்ச்சனைகளுடன் வழிபாடு சிறப்பாக நடைபெற்றது. ‘திருச்சேய்ஞலூர் திருஆப்பாடி திருப்பனந்தாள் திருப்பதிகங்கள்’ என்ற நூல் வெளியிடப்பெற்று அவ்வத்தலங்களிலும் வழங்கப்பெற்றது. வழிபாட்டின்போது திருப்பதிக பாராயணம் நிகழ்த்தப்பெற்றது. திருப்பனந்தாளில் இரவு 7 மணியளவில் வித்துவான். திரு. இரா. செல்வகணபதி M.A. அவர்களாலும் வித்துவான். திரு. மு. சிவச்சந்திரன் B.A. அவர்களாலும் சமய விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன, அங்கங்கும்

அன்பர்கள் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டும் விரிவுரைகளை கேட்டும் பயன் பெற்றனர் ஆதீன அடியவர்களும் கல்லூரி ஆசிரியர், மாணவர்களும் உழவாரப்பணி துப்புரவுப்பணிகள் செய்தனர். மூன்று ஆலயங்களிலும் ஆலய நிர்வாகிகள் குழு வினரை வரவேற்று உடனிருந்து வழிபாடு சமயப்பிரசாரம் முதலியவற்றைச் சிறப்பாக நடத்திவைத்தார்கள்.

### மன்னம்பந்தலில்

## சமயப் பேரவைத் தொடக்கவிழா

மன்னம்பந்தல் அன்பநாதபுரம் வகையார் அறத்துறைக் கல்லூரியில், அமைந்திருக்கும் தென்முகக்கடவுள் திருக்கோயில், புதிதாகக் கட்டப்பெற்ற பாலமுருகன், ஆனைமுகன் திருக்கோயில் கள் ஆகியவற்றின் திருக்குடமுழுக்கு நீராட்டுவிழா 27—3—77 அன்று நடைபெற்றது. திருக்குடமுழுக்கு நீராட்டு விழாவின் முதல்நாள் 26—3—77 இரவு யாககால பூஜை தரிசனத்திற்குத் தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் எழுந்தருளினர்கள்.

கல்லூரி முகப்பில் திரளாகக் கூடியிருந்த மாயூரம் நகரப்பெருமக்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், மாணவர்கள், மன்னம்பந்தல் கிராம மக்கள் அனைவரும் பூரண கும்ப மரியாதையோடு போற்றி எதிர்கொண்டு வணங்கி வரவேற்றார் கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் அன்பர்கள் புடைசூழ கல்லூரி முகப்பிலிருந்து திருக்கோயிலுக்கு நாதஸ்வர மேள வாத்தியங்கள் முழங்க எழுந்தருளியது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. தகுந்த மின்விளக்கு முதலிய ஏற்பாடுகள் செய்யப்பெற்று இருந்தன. ஸ்ரீ தென்முகக்கடவுள், ஸ்ரீ ஆனை முகன் ஸ்ரீ பாலமுருகன் கோயில்களுக்கு எழுந்தருளிப் பார்வை யிட்டு, யாகசாலை வழிபாடு செய்தார்கள். தருமையாதீனம் 10 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் அருளிச்செய்த 'ஸ்ரீ தட்சிணா மூர்த்தி திருவருட்பா' என்னும் நூலை வெளியிட்டு கூடியிருந்த பெருமக்கள், அன்பர்கள், கல்லூரிப்பேராசிரியர்கள் மாணவர்கள் அனைவர்க்கும் திருக்கைவழக்கமாகவழங்கி, திருக்கோயிலுக்குமருங் கே அமைக்கப்பட்டிருந்த சிறப்பு மேடையில் எழுந்தருளினர்கள் தட்சிணாமூர்த்திக் கோலமாகவே வீற்றிருந்த தம் ஞானாசாரியரை வணங்கி இன்புற்றது கூடியிருந்த திரளான கூட்டம். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவடிகட்கு அன்பநாதபுரம்வகையார்

அறத்துறைக் கல்லூரித் தாளாளர் திரு. ஏ. சோ. கணபதி பி.இ. அவர்கள் வரவேற்பிதழ் வாசித்து, அழகிய வெள்ளிப்பேழையில் வைத்துச் சமர்ப்பித்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமணியவர்களைக் "கேதாரம் குருமணி" என்று விளித்துத் தாளாளர் தம்முடைய வரவேற்புக் கவிதைகளை அளித்தபிறகு, ஸ்ரீலஸ்ரீ குருமணியவர்கள் அருளாசி வழங்கினார்கள். 'ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, ஸ்ரீ ஆனைமுகப்பெருமான், ஸ்ரீ பாலமுருகன் ஆகிய மூன்று கடவுளருமே ஆசிரியத் திருக்கோலம் உடையவர்களே என்று குறிப்பிட்டு, ஸ்ரீ தட்சிணாமூர்த்திப்பெருமானின் சின்முத்திரைக்குத் தத்துவவிளக்கம் தந்து, மாணாக்கர்கள் வழிபடு தெய்வங்களாக இம்மூர்த்தங்களைக்கொண்டு நலம் பல பெற்று வாழவேண்டும்' என்று வாழ்த்தியருளினார்கள்.

திருப்பணிக்குழுவின் சார்பில் திரு. S பாலசுப்பிரமணியப் பிள்ளை பி. எஸ். சி. அவர்கள் தக்க முறையில் நன்றிதெரிவித்துக் கொண்டார்கள். வேளூர் திரு. க. சொக்கலிங்கஓதுவாமூர்த்திகளின் திருமுறை இன்னிசையோடு விழா இனிது நிறைவுற்றது.

ஸ்ரீலஸ்ரீ குருமணியவர்கள் உடனிருந்து அஷ்டபந்தன மருந்து சார்த்தியருளி தருமைக்கு எழுந்தருளினார்கள்.

## பங்குனி உத்திர விழா

**வேளூரில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் பங்குனி உத்திர விழா 25—3—77 வெள்ளிக்கிழமை முதல் சிறப்பாக நடைபெற்றது. 25—3—77 அன்று கொடியேற்றமும் 29—3—77 அன்று சகோபுரக் காட்சியும், 31—3—77 அன்று திருத்தேர்ப் பெருவிழாவும், 3—4—77 அன்று சித்தாமிர்த தீர்த்தத்தில் உருத்திரபாதத் தீர்த்தம் கொடுத்தருளலும் நிகழ்ந்தன. நாள்தோறும் நாதஸ்வர இன்னிசை முதலியவற்றுடன் திருவீதியுலா சிறப்புற நிகழ்ந்தது. திருவிழா நாட்களில் மாலையில் சமய விரிவுரைகள் நடைபெற்றன.

28—3—77 திங்கட்கிழமையன்று திருமுறை விழாவும் தேவார வகுப்பு ஆண்டுவிழாவும் நடைபெற்றன. யானைமேல் திருமுறைகள் அலங்காரம்செய்யப்பெற்று பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்தோடு திருவீதியுலா நிகழ்த்தப்

பெற்றது. தருமையாதீனத் தமிழ்ப்புலவர் திரு. சொ. சிங்கார வேலன் M. A., Phd. அவர்கள் "ஞானத்தமிழ்" என்ற தலைப்பில் விரிவுரையாற்றி தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்கள். 29—3—77 செவ்வாய்க்கிழமையன்று தருமை யாதீனத் தமிழ்ப்புலவர் திரு. ச. தண்டபாணிதேசிகர் "அப்பர் அருந்தமிழ் என்ற தலைப்பிலும் 30–3–77 அன்று புலவர். திரு. இரா. செல்வக்கணபதி M. A அவர்கள் "சுந்தரர் செந்தமிழ்" என்றதலைப்பிலும் விரிவுரையாற்றினார்கள். அன்பர்கள்பலர் விழா வினைத் தரிசித்தும் விரிவுரைகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

**பேரளத்தில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி திருக்கோயிலில் உருத்திர பாத தீர்த்தத் திருநாள் 3—4—77 அன்று சிறப்பாக நடை பெற்றது அன்று பஞ்ச மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன, நண்பகல் பஞ்ச மூர்த்திகள் இடப வாகனத்தில் எழுந்தருளி அக்னி புஷ்கரணி தீர்த்தத்தில் உருத்திரபாத தீர்த்தம் கொடுத்தருளல் நிகழ்ந்தது.

அன்று மாலை வித்துவான். திரு மு. சிவச்சந்திரன் B A. அவர்கள் சிறுத்தொண்டர் வரலாற்றை விளக்கி விரிவுரையாற்றி னார்கள். பலர் வழிபாட்டில் கலந்துகொண்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயன் பெற்றனர். திருமுறைப் பாராயணமும் வாண வேடிக்கைகளும் நாதஸ்வர இன்னிசை நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றன.

**திருபுவனத்தில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் உருத்திரபாதத் திருநாள் சிறப்பாக நடைபெற்றது. 25—3—77 அன்று கொடியேற்றமும் 29—3—77 அன்று சகோபுரத்தில் வெள்ளி இடப வாகனக் காட்சியும், 31—3—77 அன்று திருக் கல்யாணக்காட்சியும் 1—4—77 அன்று திருத்தேர்ப் பெருவிழாவும் 3—4—77 அன்று காவிரியில் உருத்திரபாதத் தீர்த்தம் கொடுத் தருளுதலும் நிகழ்ந்தன. நாள்தோறும் நாதஸ்வர இன்னிசை நிகழ்ச்சிகளுடன் திருவீதியுலா சிறப்பாக நடைபெற்றது. விழா நாட்களில் மாலையில் சமய விரிவுரைகள் நடைபெற்றன. 28—3—77 அன்று திரு. கா. ம. கண்ணப்பன் அவர்களும் 29—3—77 அன்று தருமையாதீனத் தமிழ்ப்புலவர் திரு. வி. சபேசன் அவர்களும் முறையே "சோழர் சமயப்பணி" "பல்லவர் சமயப்பணி" என்ற தலைப்புக்களில் விரிவுரை

நிகழ்த்தினார்கள். 30—3—77 அன்று திருமுறை விழாவும் தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நடைபெற்றன: தருமையாதீனத் தமிழ்ப்புலவர். திரு. வி. சா. குருசாமிதேசிகர் M. A. அவர்கள் "பாண்டியர் சமயப்பணி" என்ற தலைப்பில் விரிவுரையாற்றி தேவார வகுப்பு மாணவர்கட்குப் பரிசுகள் வழங்கினார்கள். திருமுறைகள் யானைமேல் அலங்காரம்செய்யப்பெற்று திருமுறைப் பாராயணத்தோடு திருவீதியுலா நிகழ்ந்தது. பக்தர்கள் பலர் கலந்துகொண்டு வழிபட்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயன் பெற்றனர்.

10—4—77 ஞாயிற்றுக்கிழமை யன்று சரபேஸ்வரர் உற்சவம் சிறப்பாக நடைபெற்றது ஸ்ரீ சரபமூர்த்திக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் 10—3—77 முதல் நடைபெறும் கோடியர்ச்சனையில் ஏகதின லட்சார்ச்சனையும் நடைபெற்றன. லட்சார்ச்சனை காலையில் தொடங்கி மாலையில் நிறைவுற்றது. இரவு வெள்ளி இரதத்தில் சரபேஸ்வரர் திருவீதியுலா விசேஷ நாதஸ்வர இன்னிசைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி லட்சார்ச்சனை பிரசாதங்களை பக்தர்களுக்கு வழங்கியருளினார்கள்.

## சென்னை, தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையத்தில்

### மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு :

சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தின் மாதாந்திர சமயப் பிரசார வழிபாடு 27—3—77 ஞாயிற்றுக் கிழமை மாலை 4-மணிமுதல் சென்னை கந்தகோட்டம் ஸ்ரீகந்தசாமி கோயில் என வழங்கும் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி கோயிலில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ முத்துக்குமாரசுவாமிக்கும் ஸ்ரீ சுவாமி அம்பாளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அர்ச்சனையும் ஏனைய மூர்த்திகளுக்கு அர்ச்சனையும் செய்யப்பட்டன. வழிபாட்டின்போது நிலைய ஓதுவார் திரு S. ஞானப்பிரகாசமும், திரு. N இராமமூர்த்தி அய்யரும் வழிபாட்டிற்கு வந்திருந்த சில அன்பர்கள் முதலானோரும் முருகன் பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பாடினார்கள்.

வழிபாட்டிற்குப்பின் சமயப் பிரசாரக்கூட்டம் நடைபெற்றது. திரு. R சிவஞானம் செட்டியார் அவர்கள் எல்லாச் சமயங்களையும் விட சைவ சமயம் மேலானது, இந்தச் சமயத்தின் முக்கியத்துவத்தை எல்லோரும் உணர்ந்து தருமை யாதீனத்தால் நடத்தப்படுகிற கூட்டு வழிபாட்டில் எல்லோரும் கலந்துகொண்டு எல்லாப் பயன்களையும் பெறவேண்டுமென்று கேட்டுக்

கொண்டார்கள். சிம்மக்குரல் திரு. சீதாபதி அவர்கள் 'ஒவ்வொருவருடைய ஆன்மாவும் கடைத்தேற தருமையாதீனத்தால் நிலைய சுவாமிகளின் மேற்பார்வையில் சீரும் சிறப்புமாக நடத்தப்பட்டு வரும், இவ்வழிபாட்டில் கலந்துகொண்டு எல்லோரும் ஈஸ்வரத் தியானத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும்' என்றார்கள். திரு. E. தேவராஜன் அவர்கள் '' 'நான்', 'எனது' என்கிற ஆணவத்தை மனிதன் ஒழித்து, ஐம்புலன்களை அடக்கி இறைவன்பால் பக்தி செலுத்தி அஞ்ஞானம் நீங்கப் பெற்று ஈசன் அருளைப் பெறவேண்டும்' என்று கூறினார்கள். ஸ்ரீ ராமலிங்கசுவாமிகளால் பக்திசெலுத்தி பாடப்பெற்ற இந்தக் கோயிலின் மகத்துவத்தை திரு. V. N. ஆறுமுகம் அவர்கள் சுருக்கமாக எடுத்துரைத்தார்கள். பிரசார நிலையம் வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான்சுவாமிகள் "சும்மா இரு சொல்லற" என்றசொல்லுக்கு விளக்கவுரையாற்றி நன்றி கூறியபின் முடிவுரையுடன் கூட்டம் நிறைவுற்றது.

### நாயன்மார்கள் குருபூசை விழா :

சென்னை தருமையாதீனம் சமயப்பிரசார நிலையத்தில் எறிபத்த நாயனார், தண்டியடிகள், நேசநாயனார், கணநாத நாயனார், முனையடுவார்நாயனார் குருபூஜை முறையே 7—3—77, 18—3—77, 25—3—77, 27—3—77, 30—3—77 ஆகிய நாட்களில் நடைபெற்றது. திரு. V. N. ஆறுமுகம் முதலிய அன்பர்கள் பெரியபுராணம் படித்து விளக்கம்செய்தார்கள். பிரசார நிலையம் வித்துவான். ஸ்ரீமத் மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகளும் உரையாற்றினார்கள். திருமுறை பயிலும் மாணவ, மாணவியர்களும் அன்பர்களும் கேட்டுப் பயனடைந்தனர்.

### திருக்கோவையார் விளக்கவுரை :

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் 7—3—77, 14—3—77, 21—3—77 ஆகிய நாட்களில் திருக்கோவையார் விளக்கவுரை திரு N. R. முருகவேள் அவர்களால் தொடர்ந்து நடத்தப்பட்டது. அன்பர்கள் பலர் கேட்டுப் பயன் பெற்றனர்.

### கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா :

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் கிருத்திகைப்பிரசாதம் வழங்கும் விழா 25—3—77 வெள்ளிக்கிழமை மாலை 7-மணி அளவில் புலவர் திரு. த. மா. திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி படத்திற்கு அர்ச்சனை செய்தபிறகு நிலையஓதுவார்

திரு. S. ஞானப்பிரகாசம் வேளூர்ப்பதிகங்களை பாடினர். சென்னை D. S. P. திரு. P. V. வெங்கடேஸ்வரன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர்கள். விழாத் தலைவர் பேசுகையில் 'உலகத்தை இயக்குபவராகிய இறைவன் மாபெரும் சக்தியாக விளங்குகிறர். நேர்மையிலிருந்து தவறுகின்ற மக்களை இறைவன் நன்னெறிப் படுத்துகிறன். எளிய குடியிலே தோன்றுகிறவர்களும் இறையருளால் நாட்டையாளும் திறன்பெறுகிறர்கள்' என்று கூறி, வைத்தீஸ்வரன்கோயிலின் பெருமைகளையும் எடுத்துக்கூறி, வழிபாட்டில் அனைவரும் கலந்துகொண்டு இறைவனின் அருட் பிரசாதங்களைப் பெறவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். வித்துவான். திரு. K. ஆறுமுகம் அவர்கள் நன்றி நவின்றபின் அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கப்பட்டது.

---

## கனவில் தோன்றி பக்தர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யும் கடவுள் !

வியாதியுற்ற பக்தர்களின் கனவில் தோன்றி அவர்களின் வியாதியைப் போக்க அறுவை சிகிச்சை செய்கிறர் கடவுள் என்று ஆந்திர மந்திரியொருவர் தெரிவித்திருக்கிறர். இந்த அதிசய சம்பவம் பற்றி ஆந்திர சட்டசபையில் நகராட்சித்துறை அமைச்சர் சல்லா சுப்பநாயுடு கூறியதாவது :-

ஐதராபாத் நகருக்கு அருகே யாதவகிரி குத்தாமலை கோயில் இருக்கிறது. இந்தக் கோயிலின் தலைமைக் கடவுள் லட்சுமி நரசிம்மசுவாமி. இவர் பக்தர்களின் கனவில் தோன்றி தீராத வியாதிகளை அறுவை சிகிச்சை செய்து குணப்படுத்துகிறர். இவ்வாறு அறுவை சிகிச்சை செய்ததற்கான அடையாளங்களை நானே நேரில் பார்த்தேன்.

தூங்கிக்கொண்டிருக்கும்போது கடவுள் தோன்றி இவ்வாறு அறுவை சிகிச்சை செய்வதாகப் பக்தர்கள் கூறுகின்றர்கள். காலையில் கண்விழித்ததும் அவர்கள் வியாதி குணமடைந்து விட்டதை அறிவதாகப் பக்தர்கள் சொல்கிறர்கள். ஆபரேசன் நடந்ததற்கான அடையாளம் மட்டும் உடலில் காணப்படுகிறது.

கடவுளின் இந்த அற்புதச்செயலைக்கேள்வியுற்று ஏராளமான பொதுமக்கள் கோயிலுக்கு வருகிறர்கள். பக்தர்களின் வசதிக்காக விசேஷ ஏற்பாடுகளைக் கோவில் நிர்வாகத்தினர் செய்து வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

நன்றி. —மக்கள் குரல் 3—4—77

# எதிர்காலம்

**ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்**

**ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.**

**( பிங்களஹூ சித்திரைமீ 1வ முதல் 31வ முடிய )**

**( 13—4—1977 முதல் 13—5—1977 முடிய )**

| | | | |
|---|---|---|---|
| சு கேது | சூ பு | குரு | |
| செ சந் | இராசி | | சனி |
| | | | |
| | | | ல / ரா |

| | | | |
|---|---|---|---|
| குரு கே | சூ | செ பு | |
| ல / சு | அம்சம் | | |
| | | | |
| | சனி | சந் | ரா |

கத கலியப்தம் 5078 பிங்கள வருஷத்துக்கு கலி சுத்த தினம் 1854781 நாள், 25 நாழிகை, 56 விநுடி, 15 தற்பறை. இதை 7ஆல் வகுத்து வந்த மீதி 5 நாள் 25 நாழிகை 56 விநுடி. ½ விநுடிக்கும் குறைவான 15 தற்பறை நீக்கம் இவ்விதம் சுக்கிராத 6-வது தினமான புதவாரம் அவிட்ட நக்ஷத்திரம்கூடிய தினம் பிங்களஹூ சௌரமான சித்திரைமீ முதல் தேதியாகிறது. அன்று சூரிய உதயம் முதல் 25 நாழிகை 56 விநுடிக்கு கன்னியா லக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரிய பகவான் மீனராசியிலிருந்து மேஷ ராசி சங்கிரமணமாக ஸ்ரீ பிங்களஹூ சித்திரை மாதப்பிரவேசம் செய்கிறூர். அன்று விஷு புண்யகாலம். பிங்கள வருஷத்துக்கு இராஜா சூரியன், மந்திரி புதன் இவர்கள் ஆண்டு முழுவம் ஆட்சி புரிபவர்கள். மற்றும் இம்மாத சங்கிரமணகால கிரகஸ்திதியின் பலனுவது லோகத்தில் சுபிட்சம் நிலவும். தொழில் வளம் பெருகும். பருத்தி ஜவுளி, உணவு தானியங்கள், எண்ணெய் ஆகிய அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி குறைந்து பிரஜை

களுக்குக் கிடைக்கும். அறஸ்தாபனங்களில் அரசாங்க மனுதர்ம போக்கினால் லோகோபகார தர்மங்களுக்கான வழிதுறைகள் ஏற்பட்டு நடைமுறைக்கு வரும். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் உள்ள உத்தம சீலர்களின் ஆஸ்திக நெறியின் வழியில் நடக்கின்ற ஆஸ்திக பிரசாராதி சமய போதனைகள், தேவாலய உற்சவங்கள் சிறப்புற நடைபெற்று வரும். உலக நாடுகளில் எங்கும் பரஸ்பரம் சுபிட்சமும் ஏற்படும். பிரஜைகள் தெய்வ பக்தியுடையவர்களாகி மனவமைதியாக தூய வாழ்க்கை நடத்தி வருவார்கள்.

### 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼
( சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ. )

மேஷராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். தனவசதியில் சரளமான நிலைமையை ஏற்படுத்தி வரும். குடும்பத்தில் சுபமங்களமான காரியங்கள் நடக்கும். சகோதரருக்கு இராசாங்க செல்வாக்கை ஏற்படுத்தும். வித்தியா வியாபாராதி கலைத்துறையில் உற்சாகமும் பிரசித்தமும் ஏற்படும்; புத்திரர்களின் படிப்பு தொழில் துறை சிறக்கும். தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சி தரும். செய்தொழிலில் இராசாங்க மூலம் நன்மையைத் தரும். புதன் வியாழன் சுபமாகும்.

### 2. ரிஷபம் – கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீர்ஷம் ½
( இ. ஊ. ஏ. – ஓ. வ. வி. வு. – வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பண வசதி சரளமாக இருந்துவரும். நூதன பொருள் பிராப்தியைத் தரும். சகோதரர்களின் உதவிகளும் சலுகை பான்மையும் மனம் பெருமிதமுமாக இருந்துவரும். வித்தியா வியாபாராதிகளில் நற்பலன் ஏற்பட்டு வரும். வாகன சுகம் திருப்தியளிப்பதாக இருந்துவரும். தார புத்திரர்கள் சௌக்கியமாக இருந்து வருவார்கள். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் நற்பலனும் சாதகங்களும் ஏற்படும். வெள்ளி சனி சுபமாகும்.

### 3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾
( கா. கி. – கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். எந்த ஒரு பிரச்சினையையும் சமாளிக்கும் அளவிற்குப் பொருளாதாரம் ஏற்பட்டு வரும். சகோதரருக்கு சிரமத்துடன் கூடிய நற்காரியம் நடக்கும். எருது பசுக்கள் ஆகிய கால்நடைகள் சௌகரியங்களைத் தரும் தார புத்திரர்களின் சௌகரியம் நன்றாக இருந்து வரும். ஓர் ஸ்தல யாத்திரை ஏற்படும். செய்தொழில்களில் காரியங்கள் திறம்பட நடந்துவரும் ஞாயிறு திங்கள் சுபமாகும்.

4. கடகம்– புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

( ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் சுப பலனாக நடக்கும். பணச் செலாவணி சரளமாக இருந்துவரும். வித்துவத்துவத்தில் சிறப்பும் மகிழ்ச்சியும் சாஸ்திர பரிச்சயமும் ஏற்படும். சகோதரர்கள் சௌக்கியமாகவும் தொழில்துறை மேன்மையுடனும் இருந்து வருவர். வாகன சௌகரியம் திருப்தியளிக்கும். இயந்திர சாதனங்களில் அபிவிருத்தி பலன் தரும். புத்திரர்களில் ஒருவருக்கு சுபமங்களம் ஏற்படும். தாம்பத்திய வாழ்வு தெய்வ பக்தியுடன் நடந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் புகழ் தரும். செவ்வாய் புதன் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

(ம. மி. மு. மெ. – மோ. ட. டி. டு. – டே. )

சிம்மராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் சௌகரியங்களும் போதுமான பணவசதிகளும் இருந்துவரும். சகோதரர்களில் ஒருவருக்கு இரத்தாதிக்க நலிவு ஏற்பட்டுக் குணமாகும். பூமி இயந்திர வாகனங்களில் முதலீடு ஆகும். புத்திரர், புத்திரிகளின் சௌகரியம் நன்றாக இருந்து வரும். தாம்பத்திய வாழ்க்கை சாதாரணமாக நடந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் மனோ ஆயாசம் ஏற்படினும் நற்பலன் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

( டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ. )

கன்யாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண லேவாதேவிகள் சரளமாக இருந்துவரும். சகோதரருக்கு மூலம் பௌத்திரம் போன்ற நலிவு கண்டு குணமாகும். பெற்றோர் நலம் நன்றாக இருந்து வரும். பந்து அம்மான்களின் அனுசரணை உதவிகள் இருந்துகொண்டிருக்கும். புத்திரர்களின் சௌக்கியம் திருப்தியளிக்கும். தாம்பத்திய வாழ்வில் சஞ்சலம் காணும். துர்க்கைக்கு அருச்சனை செய்ய நலம் தரும். செய்தொழில்கள் புத்தி சாதுர்யமாகச் செயல்பட்டுவரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

( ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே. )

துலாராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். பண வரவுகள் சீராக இருந்துவரும். மனைவி வழியில் அவசியசெலவுகளும் அடிக்கடி அலைச்சலுமாக இருக்கும். பூர்வப் பொருள்

ஆதாய பிராப்தியில் அற்ப பலனாக ஓரளவு வரவு ஆ
வழக்கு விவகாரங்களில் ஜெயம் தரும். புத்திரர்களின் கல்
கலை தொழில்துறையில் சாதாரண பலனாக இருந்துவரும். மனைவிக்கு உஷ்ணவாத நலிவுகண்டு குணமாகும். செய்தொழில் சாதாரணமாக நடந்துவரும். செவ்வாய் புதன் சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

(தோ. - ந. நி. நு. நெ. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபி விருத்தியில் நல்ல முன்னேற்றம் இருந்துவரும். பணவசதியைத் தரும். போஜன சௌகரியம் திருப்தியளிக்கும். நூதன வஸ்திராபரணங்கள் வாங்குதல்மூலமும் நண்பர்கள் மூலமும் ஆடம்பர வகை செலவு ஏற்படும். தன் ஸ்திரி கெற்பத்தில்கோளாறுவந்து குணமாகும். கோர்ட்டு விவகாரம்ஜெயமாகும். அரசாங்க மூல நன்மையை ஏற்படுத்தும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் உயர்வு தரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களிலும் குடும்பவகை காரகக்கிரகங்கள் சுபாசுப மிச்சிரபலனாக இருப்பதால் குடும்பாபிவிருத்தியில் சிரமம் தோன்றும். சகோதரர் பந்து மித்திரர்கள் மாறுதலாக காட்சி தருவர். வித்தியா வியாபாராதி கலைத் துறையில் போட்டியினால் இலாபம் குறைந்து காணும். தாம்பத்திய வாழ்வில் வெறுப்பு ஒருபுறம் இருப்பினும் இல்லறம் நடந்துவரும். புத்திரருக்கு உஷ்ணவாத நலிவு வந்து குணமாகும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்ய நலம் தரும். சனி ஞாயிறு சுபமாகும்.

10. மகரம் - உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் சுப பலனாகவே நடந்து வரும். பணச் செலாவணி சரளமாக இருந்துவரும். சகோதரருக்கு அதிர்ஷ்டவசமான பொருள்கள் வந்துசேரும். பொன் மணி பூஷணங்களை அளிக்கும். பூமி பிராப்தியும் இயந்திர சாதனங்களில் நற்பலனும் ஏற்படும். சகல விஷயங்களிலும் பொறுமையாக இருந்து காரியங்களைச் சாதிக்கும். தார புத்திரர்களினால் மகிழ்ச்சியும் சௌகரியங்களும் தரும். செய்தொழில்கள் இலட்சுமிகரத்துடன் விளங்கும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

.. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾
( கு. கே. – கோ. ஸ. ஸி. ஸு. – ஸே. ஸோ. த. )

கும்பராசி 9 பாதங்களும் சுமாரான பலனைத் தரும். பணச் செலாவணி சரளமாக இருந்துவரும். பணச் செலவுக்குரிய பிரதி பலன் குறைந்து காணும். ஆயினும் வழக்கமாக உள்ள வாழ்க்கை வசதிகள் இருந்துவரும். வெளியூர்ப் பயணம் நேரும். நல்லோர் பெரியோர்களின் சந்திப்பு ஏற்படும். புத்திரர்களுக்கு சௌக்கிய பலனைக்கொடுக்கும். தாம்பத்திய வாழ்வு மகிழ்ச்சியாக நடந்துவரும். வழக்கு விவகாரங்களில் ஜெயம் தரும். செய் செய்தொழிலில் அரிய முயற்சியில் காரிய சாதனைகளை ஏற்படுத்தும். புதன் வியாழன் சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி– ரேவதி.
( தி. து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி. )

மீனராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். பணம் வரவும் செலவும் சரிசமமாக இருந்துவரும். சகோதரர் நலமாகவும் உதவிகரமாகவும் இருந்துவருவர். வித்துவத்துவம், கலைத்துறைகளில் வெளியிடங்களில் செல்வாக்கைத் தரும். புத்திரரின் கல்வி, கலை, தொழில் துறையில் மந்தமும் தேக்க நிலைமையுமாக இருக்கும். மனைவிக்கு சிரோரோகம் பித்தமயக்கம் போன்றவை ஏற்பட்டுக்குணமாகும். செய்தொழில் சாதாரணமாக நடந்துவரும், வெள்ளி சனி சுபமாகும்.

---

## சூரிய கிரஹணம்

குறிப்பு:- பிங்கள ஹு சித்திரை மீ 6உ (18-4-77) சோமவாரம் அமாவாசை அசுவதி நக்ஷத்திரத்தில் ஏற்படும். கேது கிரஸ்த கங்கண கிரஹண கிருஷ்ண வர்ண சூர்யோபராக புண்யகாலம் ஆக்னேயபர்வா. இது இந்தியாவில் பார்சுவமாகத் தெரியும். இது பொதுவாக சூரியபிம்ப நிருதி திக்கில் ஸ்பர்ஸம்.

| | ஸ்பர்சம் | மத்தியகிராசம் | பிரமாணம் |
|---|---|---|---|
| சென்னை | 4-56 P. M. | 5-54 P. M. | 37 |
| தஞ்சை | 4-51 ,, | ,, ,, | 44 |
| கொழும்பு | 4-46 ,, | ,, ,, | 55 |

இந்தக் கிரஹணம் மீன மேஷ ராசிகளுக்கு சந்தியில் ஏற்படுகிறது. கண்டாந்தத்தில் பிறந்த சிசுக்களுக்கு ஆகாது. மோக்ஷ காலம் சூரியாஸ்தமனத்திற்குப் பிறகு ஏற்படும். அன்று பகல் போஜனம் கூடாது. மறுநாள் காலையில் பூர்ண பிம்ப தரிசனம் செய்து அமாவாசை திதி சிரார்த்தமும் ரேவதி, அசுவதி, பரணி, கார்த்திகை ¼ மகம், மூலம் இந்த நக்ஷத்திரங்களில் பிறந்தவர்கள் சாந்தியும் செய்துகொள்க.



உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

## ஸ்ரீ ஞானாம்பிகை உடனாய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயில்

# பெருவிழா அழைப்பிதழ்

பெருங்கருணைத்தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த எல்லையிலாப் பெருங்கருணையினாலே, காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நிகழ் குறியாம் சிவலிங்கமாதி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பலவற்றுள் இந்திரன், அகத்தியர், தருமன், ஆகியோர்களால் பூசிக்கப்பெற்றதும், காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் திருநாமம் உற்றதும் ஆகிய சிறப்புக்களை உடையது தருமபுரம். இத்தலத்தில் ஸ்ரீ ஆலவாய்ச் சொக்கநாதப் பெருமான் திருவருளையும், கமலை ஸ்ரீ ஞானப் பிரகாச தேசிகர் அருளையும் நிரம்பப் பெற்றுத் திகழ்ந்த ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் தம் குருமூர்த்திகளது அருளாணையின்படி சைவ பரிபாலனம் என்றும் நிகழ்ந்து வருவதற்குரிய ஞானபீடத்தை இங்கு நிறுவி வீற்றிருந்து ஜீவசமாதி கூடிய கோயிலே ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில். இதன்கண் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஞானாம்பிகை உடனாய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கு நிகழும் பிங்கள ஆண்டு வைகாசித்திங்கள் 16 ஆம் நாள் (29—5—77) ஞாயிற்றுக்கிழமை தொடங்கிப் பெருவிழா நடைபெறும்.

இந்நாட்களில் "திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடும், சமயப் பயிற்சி வகுப்பும்" நடைபெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக் காட்சியைத் தினமும் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் நலம் பெறுவார்களாக.

தருமையாதீன
மடாலயம்
பிங்கள - சித்திரை

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
கார்பார்
**சொக்கநாதத் தம்பிரான்**

# ஸ்ரீ ஆதிபரமாசாரிய மூர்த்திகள் சரிதம்

பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் சைவ வேளாள மரபில் ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை மீனாட்சியம்மை என்னும் பெற்றோர்க்கு அரும்பெறற் புதல்வர் ஒருவர் சோம வார சுபதினத்தில் தோன்றினர். பிள்ளைத் திருநாமம் ஞான சம்பந்தர் என்பது. இளமையிலேயே கல்வியில் குறை வில்லாது நிரம்பினர். பெற்றோர் தம் ஆன்மார்த்த மூர்த்தி யாம் ஸ்ரீ சொக்கலிங்கத்தை வழிபட மதுரை சென்றபொழுது உடன்சென்ற ஞானசம்பந்தர் "உண்மை அம்மை அப்பர் அங்கயற்கண்ணியும் ஆலவாய் அரனுமே" என்று சொல்லிப் பெற்றோருடன் ஊர் திரும்ப மறுத்து மதுரையிலேயே இருந்தார்.

நாள்தோறும் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கிக் காலந்தோறும் ஸ்ரீ சொக்கநாதரை வழிபட்டு வந்தார். பொற்றாமரைத் தீர்த்தக் கரையில் சிவனடியார் பலர் நீராண்ட புரோதாயம் ஆடி தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும் உடையவர்களாய் நாயகன் சேவடி தைவரும் சிந்தையுடன் அமர்ந்து நைந்துருகும் அன்போடு சிவபூஜை செய்தனர். அவ்வடியார்களது செயலில் ஒருநாள் ஞானசம்பந்தரது உள்ளம் ஈடுபட, முற்பிறப்பின் பூஜை உணர்வு அவருக்கு முகிழ்த்தெழுந்தது. ஆலவாய் அப்பனை, ஆன்மார்த்த மூர்த்தியாகப் பூஜிக்க அளவிலா ஆர்வங்கொண்டு அப்பெருமானை வேண்டினர். அப்பெருமான் அவரது கனவில் தோன்றி, முற்பிறப்பில் உன்னால் பூஜிக்கப்பெற்று வந்த நாம், பூஜைப்பெட்டகத் துடன் பொற்றாமரைத் தீர்த்தத்துள் ஈசானத்திக்கில் இருக் கின்றோம்; மூழ்கிப் பெறுக, என்று அருளிச்செய்தார். ஞான சம்பந்தர் அங்ஙனமே மறுநாள் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கி, ஆன்மார்த்த மூர்த்தியைப்பெற்று ஆனந்தபரவசம் உற்றார். பின், ஸ்ரீ சொக்கநாதர் சந்நிதியில் சென்று "பெருமானே, கண்ணுக்கினிய பெருமானாய் என் கரத்தில் வந்த உன்னைப் பூசிக்கும் நெறியை அருள்புரிய வேண்டும்" என்று வேண்டினார். அன்று இரவு பெருமான் கனவில் தோன்றி "திருவாரூர் ஞானப்பிரகாசனிடம் ஞானோபதேசமும் சிவபூஜையும் பெறுக" என்று பணித்தருளி ஞானப்பிரகாசரது கனவிலும் சென்று, "உன்னிடம் வருகின்ற நம் ஞான

சம்பந்தனுக்கு விதிப்படி சிவஞானோபதேசம் செய்து சிவ பூஜையும் எழுந்தருளப்பண்ணி வைப்பாயாக" என்று சொல்லி மறைந்தருளினார்.

திருவாரூரில் சித்தீச்சரத்தில் தென்முகக் கடவுள் திரு முன்பு சீடரின் வருகையைக் குருமூர்த்தி எதிர்நோக்கி யிருந்தார். அருளாணையின்படி ஞானசம்பந்தர், கமலையை அடைந்து குருமூர்த்தியைக் கண்டதும், காந்தம் கண்ட இரும்புபோல் அவர்வசமாகி, சிவதீக்ஷையும், சிவபூஜையும் எய்தினார். அவர் நாள்தோறும் ஸ்ரீ சொக்கலிங்கத்தைப் பூஜித்துப் பாடியதே சொக்கநாத வெண்பா. அவர் செய்த குருதோத்திரமே ஞானப்பிரகாசமாலை. ஒரு நாள், ஞானப் பிரகாசர் பூங்கோயில் வழிபாட்டினை முடித்து மீள்கையில், கைவிளக்கெடுப்போன், அங்கு இல்லாமைகண்டு, ஞான சம்பந்தர் தாமே அப்பணியினை மேற்கொண்டு செல்ல, சிவத்தியான உள்ளத்துடன் செல்லும் குருமூர்த்திகள் இல்லத்தை அணுகியபொழுது 'நிற்க' என்று சொல்லி உட்சென்றார். குருவாணை கடவாத ஞானசம்பந்தர் கை விளக்கோடு வெளியிலே நின்றிருந்தார். மழை வந்தது, ஓர் அடியும் அப்புறம் பெயர்ந்திலர். மழை அவருக்கு மூன்றடி அப்பாற் சூழ்ந்தே பெய்தது. மறுநாட் காலையில் குருபத்தினியார் கண்டார்; குருமூர்த்தியும் கேட்டு வந்து, நீர் குவலயத்திற்கு உண்மை விளக்கும் குருவாயினீர். தனி இடத்தில் இருந்து உம்மை நாடி ஓடிவரும் கார ணார்க்கு உண்மை வைத்து சமய பரிபாலனம் புரிக' என்றார். சீடர்,

"கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ ?
எனக்கும் உடற்கும் எனதிச்சையோ ? இணங் கார்புரத்தைச்
சினக்கும் கமலையுள் ஞானப்பிர காச சிதம்பர இன்று
உனக்கிச்சை எப்படி ? அப்படியாக உரைத்தருளே "

என்று வேண்டினார். அதுகேட்டுக் குருமூர்த்திகள் "தருமபுரம் செல்க" எனப் பணித்தருளினார்.

ஞானசம்பந்தர் அன்றுமுதல் குருஞானசம்பந்தராகித் தருமபுரத்தை அடைந்து சமய பரிபாலனம் புரிந்தார்; ஞான நூல்கள் பல அருளினார். ஆனந்தபரவசர் முதலிய பலர் வழி ஞான பரம்பரையை உலகில் நிலவச்செய்தருளி னார். அவரே தருமபுர ஆதீன ஞானபீடத்தின் ஆதி பரமாசாரிய மூர்த்திகள்.

# திருநாள் விபரம்

| | தமிழ்த் தேதி | ஆங்கிலத் தேதி | கிழமை | திரு நாள் | திருநாள் விபரம் |
|---|---|---|---|---|---|
| வைகாசி | 15 | 28—5—77 | சனி | | காலை மணி 8-30 கணபதி ஹோமம். ஹஸ்தநக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் (இரவு மணி 7-க்கு மேல் 9 க்குள்) தனுர் லக்னத்தில், அனுக்ஞை விக்னேஸ்வர பூஜை, வாஸ்து சாந்தி, மிருத்ஸங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம். |
| | 16 | 29—5—77 | ஞாயிறு | 1 | ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 1-50 க்குள் (காலை மணி 5-51க்குமேல் 6-20 க்குள்) ரிஷப லக்னத்தில் ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி மஹோத்ஸவத் துவஜாரோகணம். |
| | 17 | 30—5—77 | திங்கள் | 2 | கற்பக விருக்ஷக் காட்சி. |
| | 18 | 31—5—77 | செவ்வாய் | 3 | பூதம், பூதகி, இடும்ப வாகனக் காட்சி. |
| | 19 | 1—6—77 | புதன் | 4 | நந்தி, காமதேனு, குதிரை வாகனக் காட்சி. |

பிங்கள ௵ வைகாசி

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | 2—6—77 | வியாழன் | 5 | சகோபுர ரிஷப வாகனக் காட்சி |
| 21 | 3—6—77 | வெள்ளி | 6 | யானை, அன்னம், ஆட்டுக்கடா வாகனக் காட்சி. |
| 22 | 4—6—77 | சனி | 7 | இரவு மணி 8-க்குமேல் 9-க்குள் தனுர் லக்னத்தில் திருக்கல்யாண வைபவம்; புஷ்ப விமானம், வெள்ளி ரதக்காட்சி. |
| 23 | 5—6—77 | ஞாயிறு | 8 | குதிரை, கிளி, யானை வாகனக் காட்சி. |
| 24 | 6—6—77 | திங்கள் | 9 | காலை மணி 5-க்கு மேல் 6-10 க்குள் விருஷப லக்னத்தில் மஹாரதாரோஹணம்; திருத்தேர். |
| 25 | 7—6—77 | செவ்வாய் | 10 | காலை ஸ்ரீ சபாநாயகர் தீர்த்தம் கொடுத்தருளல். பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாரூடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல்; இரவு துவஜாவரோகணம். |
| 26 | 8—6—77 | புதன் | | மௌன உற்சவம். |
| 27 | 9—6—77 | வியாழன் | | ஸ்ரீ சண்டேசுவரர் உற்சவம். |

உ

குருபாதம்

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

29—5—77 ஞாயிற்றுக்கிழமை ] [ மாலை 6-30 மணி

## திருஞானசம்பந்தர் திருநாள்

## பட்டி மண்டபம்

வரவேற்புரை :

வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
வேளூர் தேவஸ்தானம், கட்டளை விசாரணை.

தொடக்கவுரை :

திரு. எஸ். மகராஜன் பி. ஏ., பி. எல்., அவர்கள்
முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை

நடுவர் :

திரு. தி. வ. காந்திமதிநாதன் B. A. (Hons.)
பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மன்னன்பந்தல்.

பொருள் :

பெரிய புராணத்தில் பெரிதும் விளங்கித் தோன்றுவது
சிவபிரானின் கருணை வெள்ளமா?
சிரடியார்களின் உறுதி நெஞ்சமா?

| கருணை வெள்ளமே! | உறுதி நெஞ்சமே! |
|---|---|
| திரு. தெ. ஞானசுந்தரம் எம். ஏ. சென்னை | திரு. அ. கலியபெருமாள் எம். ஏ. மன்னன்பந்தல் |
| திரு. மு. சிவச்சந்திரன் பி. ஏ. தருமபுரம் | திரு. கா. ம. கண்ணப்பன் தருமபுரம் |
| திருமதி. துரை. வள்ளி பி. ஏ. மாயூரம் | திருமதி. ப. நீலா எம். ஏ. தருமபுரம் |

கலை நிகழ்ச்சி

தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர்கள்.

30—5—77 திங்கட்கிழமை ] [ மாலை 6-30 மணி

## திருநாவுக்கரசர் திருநாள்

## கருத்தரங்கம்

வரவேற்புரை :

**வித்துவான். ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்**
திருநள்ளாறு தேவஸ்தானம், கட்டளை விசாரணை.

நடுவர் :

தருமை ஆதீனத் தமிழ்ப் புலவர்,
**மகாவித்துவான். திரு. ச. தண்டபாணி தேசிகர்**

பொருள் :

" இந்திய சமயங்கள் "

**புலவர். திரு. ஆ. இராமபத்திரன் எம். ஏ.,**
தமிழாசிரியர், தேசிய உயர்நிலைப்பள்ளி, மாயூரம்.

— வைணவம்

**திரு. பி. இராமதாசஐயர்**
ஆனந்ததாண்டவபுரம்.

— வேதாந்தம்

**பேராசிரியர். திரு. தெ. ஞானசுந்தரம் எம். ஏ.,**
கந்தசாமி நாயுடு கல்லூரி, சென்னை.

— சமணம் – பௌத்தம்

தருமை ஆதீனத் தமிழ்ப்புலவர்,
**மகாவித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார்**

— சைவ சித்தாந்தம்

## கலைநிகழ்ச்சி

ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி
மாணவ மாணவியர்.

31—5—77 செவ்வாய்க்கிழமை ] [ மாலை 6-30 மணி

சுந்தரர் திருநாள்

## சிந்தனை மேடை

வரவேற்புரை :

வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
தருமையாதீன சமயப் பிரசார நிலையம், சென்னை.

நடுவர் :

தருமை ஆதீனத் தமிழ்ப்புலவர்,
மகாவித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

பொருள் :

"இளைஞர் எழுப்பும் வினாவிற்கு இந்திய சமயங்களின்விடை"

ஆய்வில் பங்கேற்போர் :

தருமை ஆதீனத் தமிழ்ப்புலவர்,
வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

தருமை ஆதீனத் தமிழ்ப்புலவர்,
டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பி. எச்டி.

திரு. தி. வ. காந்திமதிநாதன் பி. ஏ, ஆனர்சு.
பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மன்னன்பந்தல்.

திரு. தெ. ஞானசுந்தரம் எம். ஏ.,
பேராசிரியர், கந்தசாமிநாயுடு கல்லூரி, சென்னை.

கலை நிகழ்ச்சி

தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர்கள்.

---

1—6—77 புதன்கிழமை ] [ மாலை 6-30 மணி

மாணிக்கவாசகர் திருநாள்

## பட்டிமண்டபம்

வரவேற்புரை :

ஸ்ரீமத். பொன்னம்பலத் தம்பிரான் சுவாமிகள்
சீகாழி தேவஸ்தானம், கட்டளை விசாரணை.

சிறப்புரை :

திரு. ஈ. எஸ். கணபதி பி. இ.,
மாயூரம்.

நடுவர் :

பேராசிரியர். திரு. பா. நமசிவாயம் எம். ஏ.
திருப்பத்தூர்.

பொருள் :

செயற்கரும் செயல்களில் விஞ்சி நிற்பது
கண்ணப்பர் செயலா ? சிறுத்தொண்டர் செயலா ?

| கண்ணப்பர் செயலே ! | சிறுத்தொண்டர் செயலே ! |
| --- | --- |
| திரு. அ. அறிவொளி எம். ஏ.<br>அண்ணுமலைப்பல்கலைக்கழகம். | திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ.<br>தருமபுரம் |
| திரு. சி. சிவசங்கரன் எம். ஏ.<br>அண்ணுமலைப்பல்கலைக்கழகம், | திரு. ஆ. இராமபத்திரன் எம். ஏ.<br>மாயூரம். |
| செல்வி. கா. வள்ளிமயில்<br>மாயூரம். | செல்வி. நா. மீனுட்சிசுந்தரம்<br>மாயூரம். |

கலை நிகழ்ச்சி

ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி
மாணவ மாணவியர்.

---

2—6—77 வியாழக்கிழமை ] [ மாலை 6 - 30 மணி

மெய்கண்டார் திருநாள்

## வழக்காடு மன்றம்

வரவேற்புரை :

ஸ்ரீமத். சுந்தரலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
திருக்குவளை தேவஸ்தானம், கட்டளை விசாரணை.

நடுவர் :

திருக்குறளார். திரு. வீ. முனிசாமி பி. ஏ. பி. எல்.
விழுப்புரம்.

பொருள் :

மனுநீதிச் சோழன், மகனைக் கொன்றது அரச நீதியா ?

வழக்குத் தொடுப்பவர் : எதிர்வழக்காடுவோர் :

திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ. திரு. கோ. சாரங்கபாணி

த. ஆ. ப. கல்லூரி தருமபுரம். தமிழாசிரியர், காரைக்கால்.

கலை நிகழ்ச்சி

ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி

மாணவ மாணவியர்.

---

3—6—77 வெள்ளிக்கிழமை ] [ மாலை 6-30 மணி

## அருணந்திதேவர் திருநாள்

## கவியரங்கம்

வரவேற்புரை :

ஸ்ரீமத். கந்தசாமித் தம்பிரான் சுவாமிகள்

குறுக்கை தேவஸ்தானம், கட்டளை விசாரணை.

சிறப்புரை :

திருமதி. பார்வதி எம். ஏ.,

முதல்வர், மகளிர் கலைக் கல்லூரி, மாயூரம்.

தலைமைக்கவி :

தருமை ஆதீனத் தமிழ்ப் புலவர்,

திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ எல்.

பொருள் :

" இறையருள் பெறுதற்குரிய நெறிகள் "

தருமை ஆதீனத் தமிழ்ப் புலவர்,

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பி எச்டி.,

— மகன்மைநெறி

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம் ஏ.,

தருமபுரம்.

— தொண்டுநெறி

திரு. அ. பாலகுருவாயன் எம். ஏ.,
சென்னை.

— தோழமைநெறி

வித்துவான். திரு. வே. பசுபதி
திருப்பனந்தாள்.

— பக்திநெறி

திரு. அ. கலியபெருமாள் எம். ஏ.,
மன்னன்பந்தல்.

— அறிவுநெறி

## இசையும் நடனமும்

தருமபுரம், ஸ்ரீ ஞானாம்பிகை
அரசினர் மகளிர் கலைக்கல்லூரி மாணவியர், மாயூரம்.

---

4—6—77 சனிக்கிழமை ] [ மாலை 6-30 மணி

## மறைஞானசம்பந்தர் திருநாள்

## ஸ்ரீ ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கல்யாணத் திருநாள்

வரவேற்புரை :

ஸ்ரீமத். குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்
மாயூரம் குமரக்கட்டளை தேவஸ்தானம், கட்டளை விசாரணை.

சிறப்புரை :

திரு R. கனகசபைப் பிள்ளை
சிதம்பரம்.

விரிவுரை :

தருமை ஆதீனத் தமிழ்ப்புலவர்,
மகாவித்துவான். திரு. ச. தண்டபாணி தேசிகர்

— திருமண விழாவின் தத்துவம்

இரவு 9 மணி அளவில் :

## பொம்மலாட்டம்

ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபை, மாயூரம்.

" வள்ளித் திருமணம் "

5—6—77 ஞாயிற்றுக்கிழமை ] [ மாலை 6-30 மணி

## உமாபதிதேவர் திருநாள்

# பட்டிமண்டபம்

வரவேற்புரை :

வித்துவான். சிரோமணி. திரு. வி. சபேசன்
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

நடுவர் :

செந்தமிழ்ப் புரவலர்
திரு. இரா. இராஜசேகரன் பி. எஸ்சி. பி. எல்.

பொருள் :

இறைவன் திருவருள் பெறுதற்குரிய நெறிகளில் சிறந்தது
அன்பு நெறியா ? அறிவு நெறியா ?

அன்பு நெறியே !

திரு. அ. பாலகுருவாயன் எம். ஏ.
சென்னை.

புலவர். செல்வி. சு. பத்மா
தமிழாசிரியை, மாயூரம்.

திரு. சா. முத்துக்கிருட்டினன் பி. ஏ.,
தமிழாசிரியர், மாயூரம்.

அறிவு நெறியே !

திரு. தெ. ஞானசுந்தரம் எம். ஏ.
சென்னை.

செல்வி. இராதா-செயலெட்சுமி
தமிழாசிரியை, திருச்சிற்றம்பலம்.

புலவர். கோ. முத்தையன் எம்.ஏ.
மன்னன்பந்தல்.

### கலை நிகழ்ச்சி

ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி
மாணவ மாணவியர்.

---

6—6—77 திங்கட்கிழமை ] [ மாலை 6-30 மணி

## கமலைஞானப்பிரகாசர் திருநாள்

# சிந்தனை மேடை

வரவேற்புரை :

தருமை ஆதீனத் தமிழ்ப்புலவர்
வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.

நடுவர் :

குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனம் மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்

பொருள் :

" பெண்கள் கேட்கும் வினாவிற்குப்
பெரியபுராணம் கூறும் விடை "

வித்துவான். திருமதி. ப. நீலா எம். ஏ.,
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

புலவர். செல்வி. நா. மீனாட்சிசுந்தரம்
தமிழாசிரியை, மாயூரம்.

புலவர். செல்வி. இராதா செயலட்சுமி
தமிழாசிரியை, திருச்சிற்றம்பலம்.

புலவர். செல்வி. சு. பத்மா
தமிழாசிரியை, மாயூரம்.

செல்வி. கா. வள்ளிமயில்
மாயூரம்.

கலை நிகழ்ச்சி

ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி
மாணவ மாணவியர்.

---

7—6—77 செவ்வாய்க்கிழமை ] [ காலை 8-30 மணி

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருநாள்

## குருபூசைத் திருநாள்

வரவேற்புரை :

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ.,
தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

சிறப்புரை :

திரு. M. K. பாலசுப்பிரமணியம் I. A. S. அவர்கள்
ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

விரிவுரைகள் :

தருமை ஆதீனத் தமிழ்ப்புலவர்,
திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ.,
— சிவபோகசாரம்

வித்துவான். திரு. தா. குருசாமி
தமிழாசிரியர், மதுரை.
— சொக்கநாத வெண்பா

தருமை ஆதீனத் தமிழ்ப்புலவர்,
சிரோமணி, வித்துவான். திரு. வி. சபேசன்
— ஞானப்பிரகாசமாலை

7—6—77 செவ்வாய்க்கிழமை

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருநாள்

## குருபூஜைத் திருநாள்

காலை 9 மணி அளவில்

## ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் வழிபாடு

குருபூஜை விழா மலர்,
"திருவாசகம்."

காலை 11 மணி அளவில்

## ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் வழிபாடு

( ஆதீனஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருக்கோயில் )

மாலை 5 மணி முதல்

வரவேற்புரை :

வித்துவான். திரு. மு. சிவச்சந்திரன் பி. ஏ.,
தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

சிறப்புரை :

திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் பி. ஏ. பி. எல்.,
முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

விரிவுரைகள் :

திரு. சுந்தரேசஞ் செட்டியார் பி. ஏ., எல். டி.,
குடந்தை.

வித்துவான். திரு. மு. இரத்தின தேசிகர்
தமிழாசிரியர், திருவாரூர்.

வித்துவான். திரு. சு. மு. சுந்தரராசன்
தமிழாசிரியர், திருவாரூர்.

மாலை 6 மணி அளவில்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
காவிரித் திருமஞ்சனத்திற்கும்,
குருமூர்த்த வழிபாட்டிற்கும் எழுந்தருளல்.

இரவு 9 மணி அளவில்

## திருமுறை இசையரங்கு

திரு. திருஞானசம்பந்தம், சீகாழி.
திரு. முத்துக்கந்தசாமி, திருச்சிராப்பள்ளி. } குழுவினர்

---

8—6—77 புதன்கிழமை ] [ காலை 8-30 மணி

## பட்டணப்பிரவேசத் திருநாள்

வரவேற்புரை :

வித்துவான். திருமதி. ப. நீலா எம். ஏ.,
தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

சிறப்புரை :

திருப்பனந்தாள், ஸ்ரீகாசி மடம்
ஸ்ரீமத். காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்

விரிவுரைகள் :

தருமை ஆதீனத் தமிழ்ப்புலவர்,
திரு. க. வச்சிரவேல் முதலியார் பி. ஏ., எல், டி.,

— குரு வழிபாடு

தருமை ஆதீனத் தமிழ்ப்புலவர்,
வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,
— இலிங்க வழிபாடு

தருமை ஆதீனத் தமிழ்ப்புலவர்,
திரு. க. வெள்ளைவாரணனர்
— சங்கம வழிபாடு

காலை 10 மணி அளவில்

**ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் வழிபாடு**

நண்பகல் 1 மணி

**மாகேசுவரபூஜை**

---

8—6—77 புதன்கிழமை ] [ மாலை 5-30 மணி

**சமயப் பயிற்சி வகுப்பு நிறைவு விழா**

பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்குதல்.

வரவேற்புரை :

வித்துவான். திரு. கா. ம. கண்ணப்பன்
ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, தருமபுரம்.

சிறப்புரை ;

ஆலயத்திருப்பணி மணி,
திரு. வி. கே. இராமசாமி முதலியார்
சென்னை.

இரவு 7 மணி முதல்

**இன்னிசை**

இசைமணி, தருமையாதீன இசைப்புலவர்,
சீகாழி. திரு. எஸ். கோவிந்தராசன் குழுவினர்

இரவு 10 மணி முதல்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

**பட்டணப்பிரவேசம்**

உ

# சமயப்பயிற்சி வகுப்பு

29—5—77 ஞாயிற்றுக்கிழமை காலை பயிற்சி வகுப்புத் தொடக்க விழா

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை...

...கவுரை : திரு. எஸ். மகராஜன் பி. ஏ., பி. எல். அவர்கள் (ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதி...

| காலை மணி ...- 30 முதல் 11 - 30 | காலை மணி 11 - 30 முதல் 12 - 30 | மாலை மணி 2 - 30 முதல் 3 - 30 | 3... |
|---|---|---|---|
| ... சுவாமிநாதசிவாசாரியார் ...கமம் - சரியா பாதம் | திரு. சி. அருணைவடிவேல் முதலியார் "பதி இயல்பு" | சிரோமணி திரு. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் "வேதம்" "உபாங்கங்கள்" | திரு... |
| ...கமம் - கிரியா பாதம் | ஜஸ்டிஸ் திரு. எஸ். மகராஜன் பி.ஏ.,பி.எல். "நீதி நூல்களும் நீதிமன்றமும்" | "உபாங்கங்கள்" | |
| ” யோக பாதம் | திரு. சி. அருணைவடிவேலு முதலியார் "பசு இயல்பு" | | திரு. "சி... |
| ...கமம் - ஞான பாதம் | ” | ” | |
| திருவிழாக்கள் | "பாச இயல்பு" | இராமதாஸ அய்யர் "உபநிடதங்கள்" | திரு. "ப... |
| கும்பாபிஷேகம் | "தத்துவங்கள்" | ” | திரு... |
| தீக்ஷை | அவத்தைகள் | "பதினெண்புராணங்கள்" | திரு. ... |
| நித்திய பூஜை | "முத்திப்பேறு" | ” | "திரு... |
| ...அமைப்பும் ஊரமைப்பும் | கலந்துரையாடல் | திரு. ச. தண்டபாணி தேசிகர் "பத்ததிகள்" | திரு. ... |